விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 03 சனிக்கிழமை (16.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 087

## உண்ணாவிரத மாணவர்கள் 13 பேரின் உடல்நிலை மோசம்



(சென்னை)

இலங்கையில் ஈழத்தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதைக் கண்டித்தும் இலங்கை ஜனாதிபதியை போர்க்குற்றவாளியாக அறிவிக்கக் கோரியும்போராட்டங்கள்வலுப் பெற்று வருகின்றன.

ஐ.நா. மாமன்றத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப் பட்டு வருகின்றது.

இந்நிலையில் இலங்கைப் பிரச்சினையை மாணவர்கள் கையில் எடுத்து கடந்த எட்டு நாட்களாக தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். (19ஆம் பக்கம் பார்க்க)

### காரைநகரில் ஆயுதமுனைக் கொள்ளை

(காரைநகர்)

காரைநகர் களபூமியில் பஸ் டிப்போவுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் ஆயுத முனையில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நாவில் நேற்று அனல் பறந்த விவாதம்

## ஆதரவாகவும் எதிராகவும் கருத்துக்கள் எழுந்தன

(ஜெனிவா)

**ஐ.நா. மனிதவுரிமை ஆணைக்குழுவில் நேற்று கடும் விவாதம் இடம் பெற்றது. இதில் இலங்கை சார்பாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தனது வாதத்தை முன்வைத்தார். அதனைத் தொடர்ந்து ஆதரவாகவும் எதிராகவும் கடும் விவாதம் இடம் பெற்றது.**

ஜெனிவாவில் ஐ.நா. மனித வுரிமை ஆணைக்குழுவில் பல்வேறு நாடுகளின் மனிதவுரிமை செயற்பாடுகள் குறித்து ஆண்டு தோறும் ஆராயும் யுனிவர்சல் பிரியாடிக் ரெவ்யூ எனப்படும் வழி முறை பற்றிய அமர்வு நேற்று நடந்தது. அதில் குறிப்பாக இலங்கை மனித உரிமைகள் நிலைவரம் குறித்தவருடாந்த ஆய்வுமிகவும்முக்கியமான ஒன்றாக நடந்தேறி இருக்கிறது.

அந்த அமர்வில் இலங்கையின் சார்பில் வாதங்களை முன் வைத்த (02ஆம் பக்கம் பார்க்க)

## டி.ராஜேந்தர் ஆர்ப்பாட்டம்



(சென்னை)

இலங்கைக்குஎதிராகஅமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று லட்சிய தி.மு.க. தலைவர் டி.ராஜேந்தர் வலியுறுத்தினார்.

இலங்கை அரசைக் கண்டித்து லட்சிய தி.மு.க. தலைவர் டி.ராஜேந்தர் தலைமையில் வள்ளுவர் கோட்டம் அருகே நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

பாலச்சந்திரனை கொன்னீங்களடா பாவி, உங்க பாவங்களை மன்னிக்காதுடா ஆவி!

ராஜபக்ஷ நீ செய்த பாவம் எல்லாம் நிக்குதய்யா லைனா. உன்னை தண்டிக்காமல் விடாது ஐ.நா.! இந்திய அரசே இலங்கைக்கு வால் பிடிக்காதே நம்மளவன் நடிக்கிறான் தான் சிங்களவன் அடிக்கிறான்! தமிழினமே தூங்கதே! ஈழத்தமிழர் இதயம் தாங்காதே! இரக்கம் இல்லா காங்கிரஸ் நெஞ்சம், ஈழத்தமிழனுக்கு (02ஆம் பக்கம் பார்க்க)

## ஒரேமேடையில் கருத்துக்களம் ரணில், சந்திரிகா பங்கேற்பு

(கொழும்பு)

அரசியல்தீர்வு, ஜெனிவா மாநாடு, தமிழர்களின் தற்போதைய அவலம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான பொதுபலசேனாவின் செயற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயும் பல முக்கிய அரசியல் தலைவர்களை உள்ளடக்கிய மாநாடு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.





முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, எதிர்க். கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ சமரசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள் (02ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் போராட்ட எதிரொலி தமிழக அரசாங்கம் அதிரடி!

### கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிப்பு

(சென்னை)

தமிழகத்தில் அதிகரித்துவரும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான மாணவர்போராட்டங்களை அடுத்து அரச கல்லூரிகளுக்கு காலவரையறை அற்ற விடுமுறையை அறிவித்து தமிழக அரசு கல்லூரிகளை மூடுவதற்கு உத்தரவிட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக கல்லூரி மாணவர்களின் போராட்டம் தமிழக முழுவதும் தீவிரமடைந்துள்ளதை அடுத்து அரசு கலை, அறிவியல் கல்லூரிக்கு காலவரையற்ற விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்தவை போர்க் குற்றவாளியாகஅறிவிக்கவேண்டும். ஐக்கிய (02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசாங்கத்தின் மீது சுயாதீன விசாரணை அவசியம்

### ஐ.நாவில் கஜேந்திரகுமார் கோரிக்கை

(ஜெனிவா)

இலங்கை அரசு சர்வதேச மனிதாபிமான சட்டம் தொடர்பான மீறல்கள் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பாக செயற்பட்டு வரும் அனைத்து பரிந்துரைகளையும் நிராகரித்து வருவதால் ஓர் சுயாதீன சர்வதேச விசாரணையை நாம் கோரியிருக்கிறோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஐ.நாவில் கோரியுள்ளது.

ஐ.நா. மனிதவுரிமை பேரவையின் 22ஆவது கூட்டத் தொடரின் போது நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரையின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, நாம் இந்த அவை ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்தே குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு ஒரு முறை ஒவ்வொரு நாடு தொடர்பாக நடைபெற்று வரும் மனிதவுரிமை மீளாய்வு முறையை தொடர்ந்து கவனித்து வந்துள்ளோம்.

இப்போது இரண்டாவது சுழற்சியில் இருக்கும் இச் செயன்முறையில் சில நாடுகள் முதல் சுழற்சியின் போது இவ் அவையால் செய்யப்பட்ட பரிந்துரைகளை முற்றாக அமுல்படுத்தாது விடுத்திருந்தமையை அவதானிக்கலாம். - குறிப்பாக இலங்கை இதற்கு நல்லதோர் உதாரணமாகின்றது.

இம் மனித உரிமைகள் மீளாய்வு முறையானது வரலாற்று ரீதியாக சுதந்திரம், இனத்துவம், மொழி, கலாசாரம் (19ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு?

(புதுடில்லி)

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்திய ஆதரிக்க முடிபு செயதுள்ளதாக தெரிகிறது.

இது தொடர்பாக டில்லியில் நேற்று நடந்த காங்கிரஸ் உயர் மட்டக் கூட்டத்தில் தீர்மானத்தை ஆதரிப்பது என முடிவெடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழ் நாட்டில் நடந்துள்ள மாணவர்கள் போராட்டங்களை அடுத்து இந்திய அரசு இந்த முடிபினை எடுத்துள்ளதாக கூறப்பட்டது.

இதவேளை இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் ஜெனிவா மனிதவுரிமை பேரவையில் முன் வைக்கப்பட்டுள்ள யோசனையில் ரஷ்யா, சீனா, கியூபா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தலையிட்டு சில திருத்தங்களை செய்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

## மத்திய அரசிலிருந்து விலகுவோம்! - கருணாநிதி



(சென்னை)

ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் அமெரிக்காவினால் கொண்டு வரப்படும் தீர்மானத்தில் இலங்கை படுகொலைகள் குறித்து சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை இணைக்க இந்தியா உரிய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் திராவிட முன்னேற்றக்கழகம் இந்திய மத்திய அரசில் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கொடும்பாவி எரிப்பு

(சென்னை)

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்த மக்கள் கலை இலக்கிய கழகம் உள்ளிட்ட நான்கு இயக்கத்தினர் சென்னை அண்ணா சாலை தபால் நிலையம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டனர்.

இதனிடையே, சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவர்கள் 20 பேர் திருவள்ளூரில் ரயில் மறியல் செய்து கைதானார்கள். அத்துடன் திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அகதிகள் முகாமில் 100க்கும் மேற்பட்ட வர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (எ-11)

# ஐ.நாவில் நேற்று...

அமைச்சர் மஹிந்த சமரசிங்க இலங்கையில் நடந்தது 30 ஆண்டுகாலம் நடந்த ஒரு கொடிய மோதல் என்பதால், அதன் மூலமான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தமக்கு மேலும் அவகாசம் வேண்டும் என்று உரையாற்றினார்.

இலங்கையில் பயங்கரவாதம் முடிபுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை எவரும் மறந்து விடக்கூடாது என்றும் குறிப்பிட்ட அமைச்சர் சமரசிங்க, அதேவேளை அங்கு விடுதலைப்புலிகள் அமைப்பு நடத்திய கொடூரமான தாக்குதல்களை, நடவடிக்கைகளை எவரும் பேச முன்வரவில்லை என்றும் குற்றம்சாட்டினார்.

அவரை அடுத்து பலநாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசாங்கத் தரப்பு வாதங்களை ஆதரித்தும், எதிர்த்தும் பேசினார்கள்.

சீனா, அல்ஜீரியா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் பேசின. இலங்கைக்கு அதனது நிலைவரங்களை சீர்செய்ய நீண்டகால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று அவை கேட்டுக்கொண்டன.

அதேவேளை பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மேற்குலக நாடுகள் இலங்கை தனக்கு வழங்கப்பட்ட கடந்த 3 ஆண்டுகளில் இந்த விடயங்களில் முன்னேற்றத்தை காண தவறிவிட்டது என்றும், ஆகவே இலங்கை விடயத்தைக் கையாள ஒரு சர்வதேச பொறிமுறை அவசியம் என்றும் பேசின. அதனை அடுத்து பல மனிதவுரிமைகள் அமைப்புக்களும் (அரச சார்பற்ற நிறுவனங்கள்) அங்கு பேசின.

இலங்கைக்கு எதிராகவே அவை பெரும்பாலும் தமது கருத்துக்களை அங்கு முன்வைத்தன. (எ-11)

# ஒரே மேடை...

ளிட்ட மேலும் பல தலைவர்கள் இம் மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

கொழும்பு ஜெய்க் ஹில்டன் ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை 1.45 இற்கு ஆரம்பமாகும் வேற்றுமையில் ஒற்றுமை என்ற தலைப்பிலான இம் மாநாட்டை தேசிய ஐக்கிய முன்னணி ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிராக முடுக்கிவிடப் பட்டிருக்கும் பேரினவாத செயற்பாடுகளின் மத்தியில் அச் செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக ஆராயும் வகையில் மேற்படி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அஸாத் சாலி தெரிவித்தார்.

அரசியல் தீர்வு, ஜெனிவா மாநாடு மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான பொது பல சேனாவின் செயற்பாடு தொடர்பில் அரசியல் தலைவர்கள் இம் மாநாட்டில் விரிவான கருத்துக்களை முன்வைப்பர் என்றும் அவர் கூறினார். (எ-11)

# டி.ராஜேந்தர்...

செஞ்சதடா வஞ்சம்! என்பது உட்பட பல்வேறு கோஷங்களை டி.ராஜேந்திரர் முழங்கினார்.

அவர் பின்னர் பேசியதாவது,

ஈழத்தமிழர்களை கொன்றபோது அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி செம்மொழி மாநாடு நடத்தினார்.

இன்று ஆட்சியில் இல்லை. அதனால் டெசோ நடத்திக் கொண்டிருக்கிறார். ஆட்சியில் இருக்கும்போது அவர் ஒன்றும் செய்ய வில்லை. எனவேதான் அனைவரும் அவரை இன்று சாடுகின்றார்கள்.

ஈழப்போர் நடந்து கொண்டிருந்தபோது மத்தியில் உங்கள் கட்சிக்கு அதிகாரம் தேவை என்று காங்கிரசுக்கு நமஸ்காரம் செய்து கொண்டிருந்தீர்கள். இன்று கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்கின்றீர்கள்.

காங்கிரஸை எதிர்த்து தி.மு.கவை அண்ணா தொடங்கினார். அந்த எதிர்ப்பு இப்போது இல்லாமல் போனதால் தி.மு.க இன்று முடங்கி விட்டது. மக்களிடம் ஆதரவு இல்லாததால் டெசோ பந்த் பிசுபிசுத்து போனது.

இலங்கையில் இப்போதுள்ள ஈழத்தமிழர்களையாவது காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு கருணாநிதி உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும். இவ்வாறு டி.ராஜேந்தர் பேசினார். (எ-11)

# மாணவர் போரா...

நாடுகள் சபை மனித உரிமைக் கவுன்சிலில் இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து இந்தியா தனித் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி கல்லூரி மாணவர்கள் தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம், ஆர்ப்பாட்டம், கொடும்பாவி எரிப்பு உள்ளிட்டவற்றை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக எதிர்வரும் 18-ம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த மாணவர்கள் முடிபு செய்திருந்தனர்.

இதனை அடுத்து, அனைத்து அரசு கலை, அறிவியல் கல்லூரிகளுக்கும் காலவரையற்ற விடுமுறை அறிவித்து தமிழக அரசு நேற்று திடீர் உத்தரவு பிறப்பித்துள்ளது.

எனினும் அரசின் அறிவிப்பு மூலம் தங்களின் போராட்டத்தை ஒடுக்க முடியாது என மாணவர்கள் அறிவித்துள்ளனர். (எ-11)


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(சி/2694)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No.:-021 222 5

WESTERN UNION MONEY TRANSFER



## CIMA-UK கணக்கியல்-சான்றிதழ் கற்கை நெறிக்கான புலமைப்பரிசில்

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கை நெறிக்காலம் 3 மாதங்கள். 16 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்க முடியும். உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான புதிய பிரிவு 17 ந் திகதி ஆரம்பமாகின்றது. இக் கற்கைநெறியை பயில்வதற்கான 16000 ரூபா வரையிலான புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. இப் புலமைப்பரிசில் மூலம் CIMA கல்வியை பயில விரும்பும் மாணவர்கள் இல 324 பலாலி வீதி பரமேஸ்வராச்சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில்நுட்ப வளாகத்திற்கு 17ந்திகதிக்கு முன் நேரில் சமூகம் தரவும்.



## கடை ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 26.03.2013 செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இவ் பொங்கல் உற்சவத்தின் போது வாணிபம் செய்ய விரும்புகின்றவர்களுக்கான கடை ஏலம் விடும் நிகழ்வு எதிர்வரும் 17.03.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

- ஏலத்தின்போது முழுத் தொகையும் உடனடியாக செலுத்தப்படுதல் வேண்டும்.

முக்கிய குறிப்பு :- உணவு வாணிபங்கள், ஐஸ்கிறீம் வாணிபங்கள் என்பவற்றை மேற்கொள்ள விரும்புவோர் உள்ளூராட்சி மன்றத்தின் அவ் வாணிபத்திற்கான உரிமம் பெற்றவர்களாக இருப்பது அவசியமானது.

- ஆலய பரிபாலன சபை

(சி-2650)



## கண்ணீர் அஞ்சலி



அமரர்
சின்னத்தங்கம் சதாசிவம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நலன் விரும்பியான பிரபல வர்த்தகர் வின்சேந்திரராஜன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி சின்னத்தங்கம் சதாசிவம் அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி
சமூகம்.

(C-2701)



## வீடு வாடகைக்கு உண்டு

சுழிபுரம் தெற்கு தொல்புரம் காரைநகர் பிரதான வீதியில் விவசாயத்திணைக்களத்திற்கு முன்னால் 7 1/2 பரப்புக்காணியில் ஐந்து அறைகளுடன் கூடிய வீடு மாபிள் பதிக்கப்பட்டது. வாடகைக்குக் கொடுக்கப்படும். அரச தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 0777534249

(2148)








## Diploma in Pharmacy

Leading To Bsc Pharmacy

2 Years Course
CMCC Syllabus
Full Practical
Addmissions Open
Monthly Rs.3000/= ONLY
*Initial Payment Rs.20000/=
உடனடி வேலை வாய்ப்பு!!
இன்று எமது புதிய பிரிவு ஆரம்பம்

Visalam Wide and Beyond

Visalam MINDS
127/1 Temple Road Jaffna
021 221 9695 075 979 9695
Email: admin@visalamholdings.com



## பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

25% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829



## மனோதத்துவ வைத்தியம்

## (General Psychotheraphy)

## பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம் T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

12.03.2013 முதல் 17.03.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப் படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

### நாதன் இன்

(பழைய கமால் லொட்ஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(சி-2697)



## NALIN IT

எங்கும் இல்லாத மிகக்குறைந்த விலையில் அனைத்து வகை RAM களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

| | |
|---|---|
| 2GB DDR III Ram | Rs 2,400.00 |
| 4GB DDR III Ram | Rs 3,500.00 |
| 1GB DDR II Ram | Rs 3,500.00 |
| 2GB DDR II Ram | Rs 5,500.00 |
| 1GB DDR I Ram | Rs 6,500.00 |
| 4GB Micro SD | Rs 640.00 |
| 8GB Micro SD | Rs 1,200.00 |

(with cover)

hp RAM

1 year warranty

NALIN INFORMATION TECHNOLOGIES PVT. LTD
195/2, Palaly road, Parameswara Junction, Jaffna.
TP-0212221121
0777667975
facebook/nalinit


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞானம்

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு ராணி இருந்தார்.

ராஜாவினுடைய அரண்மனைக்கு பெரிய பெரிய ஞானிகள் வருவது வழக்கமாக இருந்தது. வருகிற ஞானிகள் கூறும் உபதேசங்களையெல்லாம் அந்த ராணி அவதானமாகத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

அதனுடைய விளைவு, அவளும் ஒரு ஞானி ஆகிவிட்டாள். ஞானி மட்டுமல்ல... தன்னுடைய உருவத்தை மாற்றி விட்டு ஆகாயத்திலே பறக்கும் சித்தியும் அவளுக்குக் கிடைக்கப் பெற்றது. நினைத்தால் ராணி எங்கேயும் பறந்து உலா வரலாம்– அப்படிப்பட்ட சக்தி அவளிடம் வந்து விட்டது.

உடனே ராஜா– ராணியிடம் சென்று– ''இதோ பார்! நானும் உன்னை மாதிரியே ஞானி ஆக வேண்டும். எனக்கும் ஏதாவது உபதேசம் செய்'' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு ராணி, ''நீங்கள் ஞானி ஆக வேண்டுமென்றால் அனைத்தையும் துறந்து, தயாராக ஒரு நிலைப்பட வேண்டும். உங்களை விட்டு வைராக்கியம் இன்றும் போகவில்லை'' என்று கூறினாள்.

''சரி'' என்று அமைதியாக ராஜா இருந்து விட்டார்.

நாட்கள் நகர்ந்தன. ராஜா காட்டுக்குப் போய் தவம் செய்ய வேண்டுமென ஆசைப்பட்டார். ஆனால், ராணிக்கு விருப்பமில்லை. அதனால் அவர் சம்மதப்படவில்லை.

ராஜாவுக்கா வழி தெரியாது? அவர் சொல்லாமல் ஒரு நாள் இரவு காட்டுக்குப் புறப்பட்டுப் போனார்.

ஆகாயத்திலே பறக்கிற சக்தி அவளுக்கு ஏற்கனவே கிடைத்தபடியால் இளம் முனிவர் மாதிரி தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொண்டார்.

புறப்பட்டுப் பறந்து போனாள் காட்டுக்கு... ராஜா இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டாள்.

நேராக ராஜாவுக்கு முன்னால் போய் இறங்கினாள். இந்த இளம் முனிவர் அதுதான் அந்த ராணி.

ராஜா இந்த இளம் முனிவரைப் பார்த்ததும் தலை வணங்கினார்.

''நான் நீண்ட காலமாக தவம் செய்கிறேன். மன நிம்மதி எனக்கு இன்னும் கிட்டவில்லை. தாங்கள்தான் அருள் புரிய வேண்டும்'' என்றார்.

அதற்கு அந்த இளம் முனிவர்; ''அனைத்தையும் துறக்க வேண்டுமென்று உங்கள் மனைவி ஒரு சமயம் உபதேசம் செய்தாளே! அதன் பின்னர் அனைத்தையும் விட்டு விட்டீர்களா?'' என்று கேட்டார்.

''அனைத்தையும் விட்டு விட்டேன். இன்னும் இந்த ஆசிரமத்தைத்தான் விடவில்லை'' என்று சொல்லிவிட்டு நெருப்பிலே குதிக்கப் போனார்.

இளம் முனிவர் ராஜாவை உடனே தடுத்து நிறுத்தினார்.

''உடம்பு உங்களுக்குச் சொந்தம் இல்லை... அதெல்லாம் பஞ்ச பூதங்களுக்கு சொந்தம்'' என்றார்.

ராஜா சிறிது நேரம் யோசித்தார். ''அப்படியென்றால், எனக்கு என்னதான் சொந்தம்?'' என்று கேட்டார்.

''உங்கள் அகங்காரம்தான் உங்களுக்குச் சொந்தம். நீங்கள் உங்களிடம் இருந்து துறக்க வேண்டியது அதைத்தான். அதை விட்டு விடுங்கள் முதலிலே. அது உங்களிடம் இருப்பதால்தான் இந்த உலகமே உங்களிடம் இருக்கிறதாக நினைக்கிறீர்கள். அகங்காரம் இருக்கிறதால்தான் இந்த உலகப் பொருட்கள் உங்களுக்குச் சொந்தமென்று தோன்றுகிறது'' என்று இளம் முனிவர் உருவத்திலே இருந்த ராணி கூறினார்.

உடனே ராஜா ''இதோ என்னிடம் இருக்கிற அகங்காரத்தை விட்டு விடுகிறேன்'' என்றார்.

அதன்பின்தான் அந்த ராஜாவும் ஞானியானார். ராணிக்கு கிடைத்த மாதிரியான சித்தி அவருக்கும் கிடைக்கப்பெற்றது.

இந்தக் கதையை ஒருவருக்கு மிகவும் உணர்வு பூர்வமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் உடனே சொன்னார்;

சித்தியடைவதற்கு அந்த ராஜா எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டிருக்கிறார்.

நான்கூட சித்தி அடைந்திருக்கிறேன். ஆனால், அவ்வளவு கஷ்டப்படவில்லை. உங்களுக்கு சுலபமாக ''சித்தி'' கிடைக்கப் பெற யார் காரணம்? என்று கேட்டேன்.

''எங்கள் அப்பாதான் காரணம் அவர் இரண்டாவதாக ஒரு கல்யாணம் செய்தார். உடனே ''சித்தி'' வீட்டுக்கு வந்து விட்டார்.

''எனக்கு சித்தி கிடைத்த கதை'' இது தான் என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்களும் காணிக்காக காத்திருப்பு

வவுனியா ஆசிகுளம் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள சிதம்பரபுரம் கிராமத்தில் கடந்த 1990 ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வரும் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்வதாக தெரிவிக்கின்றனர்.

199 குடும்பங்கள் வசித்து வரும் இந்நலன்புரி நிலையம் கடந்த 1990 ஆம் ஆண்டில் யுத்தம் காரணமாக வடக்கில் இருந்து இடம் பெயர்ந்தவர்களை தங்க வைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையில் படிப்படியாக வடக்கின் பல இடங்களிலும் இருந்து 90 களின் பின்னர் இடம்பெயர்ந்தவர்களும் தங்க வைக்கப்பட்டதுடன் இந்தியாவில் இருந்து மீண்டும் தாயகம் திரும்பியவர்களுமாக பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வசிக்கும் நலன்புரி நிலையமாக காணப்பட்டது.

எனினும் பின்னர் சில குடும்பங்கள் தமது சொந்த மாவட்டங்களுக்கும் காணி நிலங்களுக்கும் சென்றுவிட ஏனைய சிலர் வவுனியாவின் சில பகுதிகளில் வீட்டுத் திட்டத்துடன் குடியேற்றப்பட்ட காணி அற்றவர்களும் நலன்புரி நிலையத்தில் பிறந்து வளர்ந்தவர்களுமாக 199 குடும்பங்கள் நிரந்தரமாகவே அங்கு தங்கி விட்டனர்.

எனினும் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னராக காலப்பகுதிகளில் நலன்புரி நிலையங் கள் என்ற பதம் இலங்கையில் அமைதல் கூடாது என்ற ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் சிதம்பரபுரம் நலன்புரி நிலையமும் முகாம் என்ற பதத்தில் இருந்து நீக்கப்பட்டு நிவாரணங்கள் நிறுத்தப்பட்டாலும் அது தற்போதும் முகாமாகவே செயற்பட்டு வருகின்றது.

இங்குள்ள மக்கள் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

தமக்கு நிவாரணங்களோ அடிப்படை வசதிகளோ செய்து தரப்படவில்லை எனவும் தமக் கென இலங்கையின் எப்பகுதியிலும் சொந்த நிலம் இல்லாத நிலையில் தாம் எங்கே போவதுஎனதெரியாது இருப்பதாகவும் கூறுகின்ற னர்.

இதேவேளைதமதுகுழந்தைகள் இம் முகாமிலேயே பிறந்து வளர்ந்து திருமணம் செய்து இருப்பதனால் இப்பகுதியே தமக்கு பழக்கப்பட்டுவிட்டமையினாலும் தாம் இருக்கும் இப்பகுதியிலேயே காணிகளை வழங்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது வட பகுதியில் பல அபிவிருத்திகள் இடம் பெற்றபோதிலும்தாம்அதனை அனுபவிக்க முடியாதிருப்பதாகவும்தெரிவிக்கும் இவர்கள் தமக்கென காணிகளை வழங்கும் பட்சத்தில் தாமும் வீடுகளை அமைத்து முகாம் வாழ்வில் இருந்து விடுபட வசதியளிக்கும் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளர் கூறுகையில்,

இப்பகுதியில் வாழும் மக்கள் தமக்கு காணிகளை அப்பகுதியில் வழங்கு மாறு கோரிக்கை விடுத்து வருகி ன்றனர். எனினும் அரசாங் கம் அவர்களை தமது சொந்த இடங்களுக்கு செல்லுமாறு தெரிவித்துள்ளது. அரசாங்கம் அவர்களுக்கு அப் பகுதியில் காணிகளை வழங்குமாறு தெரிவித்தால் அதனை வழங்க நாம் நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்தார். (அ-2-266)

# கும்பாபிஷேகம்

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய திரிதள இராஜகோபுர புனராவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமையுடன் ஆரம்பமாகி நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரையும் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். 18ஆம் திகதி திங்கட்கிழமை 10.20 மணிக்கு கும்பங்கள் வீதி வலம் வருதலும் அதனைத் தொடர்ந்து ஸ்ரீவீரமாகாளி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அபிஷேகம் நடைபெறவுள்ளது. (அ-2-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 150 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 180 |
| தக்காளி | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 |
| கோவா | 40 | 60 | 50 |
| கரட் | 100 | 140 | 100 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 70 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 70 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 60 | 90 | 90 |
| பாகற்காய் | 120 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 100 |
| கறிமிளகாய் | 90 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 |
| போஞ்சி | 80 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 40 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 45-50 |
| இராசவள்ளி | 100 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 160 | 160 | 160 |

# இராசி பலன்

16.03.2013
(பங்குனி 03, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 5.35 மணிவரை
பரணி மாலை 6.02 மணிவரை
இராகுகாலம் 9.19-10.49 மணிவரை
சுபநேரம் 3.19-4.49 மணிவரை
சித்தாமிர்தம்

**மேடம்**

வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், கற்பனை மிகுதியான நாள்.

**இடபம்**

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், தொழில் வளர்ச்சியுண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், சுப செலவுகள் கூடும், எதிலும் பொறுமையாகச் செயற்படுவது நல்லது.

**மிதுனம்**

தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும், புதிய நட்புகள் அறிமுகமாகலாம், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சிதரும்.

**கடகம்**

திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் நிறைவேறலாம், தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவ முன்வருவர், ஆரோக்கியமான நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிங்கம்**

சொத்துப் பிணக்குகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும், உடல் உழைப்பில் அக்கறை காட்டுவீர்கள், வீண் பயமுண்டு, மறைமுகப் போட்டிகளையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

**கன்னி**

எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலக் குறைவால் உற்சாகம் குறையாம், பணப்பற்றாக்குறையுண்டு, போசன சுகமுண்டு, வேலைச்சுமை கூடும்.

**துலாம்**

திடீர் பயணங்கள் கைகூடும், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், சுற்றத்தார் வருகையால் சுகம் கூடும் நாள்.

**விருச்சிகம்**

உற்சாகமான நாள், கலகலப்பான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த கருமங்களில் சாதகமான நிலை தென்படும், வருமானம் திருப்தி தரும், போசன நன்மையுண்டு.

**தனுசு**

வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள புதிய வழி பிறக்கும், சில காரிய இடையூறுகள் ஏற்படலாம்.

**மகரம்**

பயந்த சுபாவமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வாகன யோகமுண்டு, பக்குவமாகப்பேசி பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

**கும்பம்**

சுதந்திரமாகச் செயற்படுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பொது விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**மீனம்**

உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறுமி மீது துஷ்பிரயோகம்; இளைஞருக்கு விளக்கமறியல்

கரவெட்டி இராஜகிராம பகுதியில் 6 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளைஞரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். சிறுவர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.


கரவெட்டி இராஜகிராம பகுதியில் பிரஸ்தாப சிறுமியின் வீட்டுக்கும் இளைஞருக்கும் நீண்டகாலமாக தொடர்பு இருந்துள்ளது.

இதனால் அவ்வீட்டிற்கு அடிக்கடி சென்று வந்த இளைஞர் பிரஸ்தாப 6 வயது சிறுமியை நீண்டகாலமாக பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்ததாக சிறுமியின் பாடசாலை ஆசிரியர் மூலம் தெரிய வந்தது.

இதனையடுத்து நெல்லியடி பொலிஸார் குறித்த இளைஞனை கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்து யாழ். சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த இளைஞனை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-3-24)




## மாணவர்களுக்கு மருத்துவ சோதனை

யாழ். கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 1 தரம் 4தரம் 7ஆகிய தரங்களையுடைய மாணவர்களில் சுமார் 106 பேரைமுள்ளியின் றுித்திய வெட்டைவைத்தியசாலை நிர்வாகத்தினர் விசேட பரிசோதனையை மேற்கொண்டனர்.

இந்த பரிசோதனையில் இருதயம் சிறுநீரகம் கண் மற்றும் தோல் செமிபாட்டு தொகுதி பிரச்சினையினால் உட்கொள்ளப்படும் உணவில் இருந்து சீராகஅகத்துறிஞ்சப்படாது போசாக்கு குறைந்த மாணவர்களென பலர் கண்டறிப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக முள்ளியான் வைத்தியசாலையின் வைத்தியர்ரிஉமாபதிசிவம்தெரிவித்துள்ளார். (அ-3-64)

## சமாதான நீதவானாக சத்திய பிரமாணம்



அல்வாய் வடமத்தியைச் சேர்ந்த கிட்டிணன் -கணேசன் யாழ்.மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக கடந்த பெப்ரவரி மாதம்28-ம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதி பதி திருமதி ஸ்ரீநிதி-நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யா/தேவரையாளி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின்முன்னாள்அதிபருமஆவார். (அ)

# மின்சாரம் தடைப்படும்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் மின்அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் நாளை சனிக்கிழமையும் திங்கள் தவிர்ந்து தொடர்ந்து நான்கு நாட்களும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 5 மணிவரையும் மின்வெட்டு அமுலில் இருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி இன்று சனிக்கிழமை சுன்னாகம், குப்பிளான், மல்லாகம், ஏழாலை, மயிலங் காடு, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதி, மாவிட்டபுரம், கீரிமலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், மந்திகைப் பிரதேசம், புலோலி, சாரையடி, ஓராம்கட்டை, தம்பசிட்டி, பருத்தித்துறைப் பிரதேசம், அல்வாய் பிரதேசம், நெல்லியடி பிரதேசம், கரவெட்டி பிரதேசம், கரணவாய் பிரதேசம், குஞ்சர்கடைப் பிரதேசம், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக் கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன் மணல் பிரதேசம், சங்கரத்தை, அராலி தெற்கு, வடக்கு, கிழக்கு, மத்தி, யாழ்ப்பாணக் கல்லூரிப் பிரதேசம், வட்டு. பொலிஸ் நிலையப் பகுதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும். (அ)

## பொலிஸாரின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை இன்று

நெல்லியடி பொலிஸாரினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை இன்று சனிக் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை வரை அல்வாய் தெற்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் மருத்துவ மருத்துவ சேவை, சட்ட ஆலோசனைகள் என்பனவும் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இதில் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டி வடமராட்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. (அ-3-24)

## மருதங்கேணியில் மருத்துவ சேவை

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வைத்தியசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை விசேட மருத்துவ சேவை இடம் பெறவுள்ளதாக மருதங்கேணி வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது, வடமராட்சி கிழக்கு மக்களின் நன்மையை கருத்திற் கொண்டு பொது வைத்தியர் கேதீஸ்வரனின் ஏற்பாட்டில் மருதங்கேணி வைத்தியசாலையின் அனுசரணையுடன் இந்த வைத்திய சேவை இடம் பெறவுள்ளது.

இதில் பற்சிகிச்சை தவிர ஏனைய அனைத்து நோய்களுக்குமான விசேட சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்த வைத்திய சேவை அன்றைய தினம் காலை 8 மணி தொடக்கம் இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-64)

ஓம் சக்தி

வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பிட்டியம்பதி உறை

**வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய**
**வருடாந்த மகோற்சவப் பெருவிழா-2013**

அம்பிகை அடியார்களே!

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நிகழ்வுறும் நந்தன வருடம் பங்குனி மாதம் 03 ஆம் நாள் இன்று (16.03.2013) சனிக்கிழமை ந.ப 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் உற்சவம் நடைபெறத் திருவருள் கை கூடியுள்ளது.

அனைவரும் வருக! அம்மை அப்பன் அருள் பெறுக!

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (C-2706) ஆலய அறங்காவலர்கள்.

**முகாமைத்துவ உதவியாளர் பதவி**

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்**

- HNDA, AAT or NCAT அல்லது அதற்கு சமனான தகைமை.
- தனியார் கம்பனியில் மேற்குறித்த சேவையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது.
- Quickbook Packageல் அனுபவம்.

தகைமையுடையோர் முழு விபரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை 22.03.2013-ம் திகதிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

இல.45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(சி-2702)

ஏப்ரல் 13 ஆம்
திகதி வரை மட்டும்.....

ஏப்ரல் 13 ஆம்
திகதி வரை மட்டும்.....

**சரவணா ரெக்ஸ்**
(களஞ்சியசாலை)
01. சிவப்பிரகாசம் வீதி. வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

புதிய தெரிவுகளுடன்
சித்திரை புதுவருடத்தை
முன்னிட்டு மிக
பிரமாண்டமான சும்மா
அசர வைக்கும்

**மலிவு விற்பனை...!**

சும்மா மனதை
ஈர்க்கும் அழகிய
தெரிவுகள்

- Office Wear Silk Saree - 500/-
- Office Wear Silk Cotton Saree - 500/-
- Office Wearசேட்டும் ஜீன்ஸ், துணியும்- 1000/-
- புத்தம் புதிய ரெடிமேற் பஞ்சாபி கொட்டன் 2000/-
- ரெடிமேற் சில்க் பஞ்சாபி 2000/-
- பெண்களுக்கான Office Wear Top 500/-
- Office Wear சில்க் சர்வார்துணி 750/-



ஏப்ரல்
13 ஆம்
திகதி
மட்டும்!

1000
ருபாவிற்கு
1 சேட்டும்
ஜீன்ஸ்
துணியும்

**சரவணா ரெக்ஸ்**
(களஞ்சியசாலை)
சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

நேரம்: காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை
காலம்: ஏப்ரல் 13 ஆம் திகதி வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீட்டுத்திட்டத்தில் தமிழர்களுக்கு பாரபட்சம்

## மீள்குடியேறியோருக்கான நலன் பேணும் அமைப்பு மீண்டும் கடிதம்

இந்திய வீட்டுத்திட்டத்தில் தமிழ் மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதாக கூறி இந்திய உயர்ஸ்தானிகருக்கு மீளவும் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

இந்திய வீட்டுத்திட்டத்தில் தமிழ் மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதாக கூறி இந்திய உயர்ஸ்தானிகருக்கு வவுனியா மாவட்ட மீள்குடியேறியோருக்கான நலன் போணும் அமைப்பு மீளவும் கடிதம் ஒன்றை கடந்த புதன்கிழமை அனுப்பி வைத்துள்ளது. இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 23 .02. 2013 ஆம் திகதி சந்திப்பையடுத்து கடந்த 07.03.2013 அன்று தங்களது தூதரகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையானது எமக்கு மிகுந்த கவலையையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளது. அவ் அறிக்கை தொடர்பில் நாம் சில விடயங்களை தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

தங்களது தூதரக அறிக்கையில் பயனாளிகள் தெரிவு முறைமைகள் இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அமுலாக்க முகவர்களாலும் இலங்கை அரசாங்கத்தின் உள்ளூர் உத்தியோகத்தர்களாலும் இணைந்தே செய்யப்படுகின்றன என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருந்தது.

வீட்டுத்திட்டத்திற்காக கிராமமும் பயனாளிகளின் எண்ணிக்கையும் தீர்மானிக்கப்பட்டதற்கு பின்னர் அந்தக் குறித்த கிராமத்தில் பயனாளிகளை தங்களால் குறிப்பிடப்பட்டவாறு உள்ளூர் உத்தியோகத்தர்களும் அமுலாக்க முகவர்களும் தெரிவு செய்கின்றனர் என்பது சரியாக இருக்கலாம். அதில் கூட அவர்கள் சுதந்திரமாக செயற்பட முடிவதில்லை என்பது வேறு. அதேவேளை அந்தக் குறிப்பிட்ட கிராமங்களையும் பயனாளிகளின் எண்ணிக்கையினையும் தீர்மானிப்பது யார்? அவற்றை உள்ளூர் உத்தியோகத்தர்களோ அமுலாக்க முகவர்களோ தீர்மானிக்கவில்லை என்பதே உண்மையான நிலைமையாகும்.

இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் முக்கியமான விடயமாக எந்தக் கிராமம், எத்தனை பயனாளிகள் என்பதை தங்களால் குறிப்பிடப்பட்டவாறு உள்ளூர் உத்தியோகத்தர்களோ அமுலாக்க முகவர்களோ தீர்மானிக்கவில்லை என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். போரில் முழுமையான பாதிப்புற்றவை தமிழ் கிராமங்கள் என்பதுவும் முழுமையாக பாதிப்புற்ற மக்கள் தமிழ் மக்களே என்பதுவும் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

இந்திய வீட்டுத்திட்டம் கட்டம் 1, 2, 3 என்பவற்றில் முன்னுரிமை அடிப்படையில் தமிழ் மக்களுக்கு வீடுகள் வழங்கப்பட வேண்டியதுதானே முறையான செயலாக அமையும். ஆனால், தமிழ் கிராமங்களை தவிர்த்து ஏனைய கிராமங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதை தாங்கள் அறியவில்லையா? இது பாரபட்சமாக தெரியவில்லையா?

முழுமையாக பாதிப்புற்ற தமிழ் கிராமங்கள் பல உள்ளபோது சாளம்பைக்குளம் தவிர்ந்த ஏனைய முஸ்லிம் கிராமங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டியதன் அவசியம்தான் என்ன? தமிழ் கிராமங்களும் தெரிவு செய்யப்படுகின்றன என்பதைக் காட்டிக் கொள்ள குறைந்த எண்ணிக்கையிலான தமிழ் மக்களை தெரிவு செய்து கொண்டு முஸ்லிம் மக்களின் வீட்டுத் தேவைகள் முழுவதும் கட்டம் 1, 2, 3 இனுள் பூர்த்தி செய்யப்படும் வகையில் கிராம மற்றும் பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுள்ளமை நியாயமான செயல் தானா. இது பாரபட்சமில்லையா?

இந்திய வீட்டுத்திட்டம் 14 கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கூறுவதன் மூலம் இறுதிக்கட்டங்களிலேயே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வீடுகள் வழங்கப்படவுள்ளதா? என்ற சந்தேகத்தையும் எமக்கு ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இந்திய வீட்டுத்திட்ட உதவியில் மக்கள் இடம்பெயர்ந்துள்ளமை தொடர்பில் புள்ளி வழங்கப்படுகின்றபோதும் முக்கியமாக அக்குடும்பத்திற்கு ஏற்பட்ட பிள்ளைகளின் உயி ரிழப்புக்கள் பற்றியோ காணாமல் போனோர் பற்றியோ கவனத்திற் கொள்ளப்படவும் இல்லை. அதற்கு புள்ளி வழங்கப்படுவதும் இல்லை.

வீட்டுத்திட்டம் வழங்கப்படும்போது இன, மத, பேதம் பார்ப்பதில்லை என்ற தங்களது கொள்கையுடன் நாமும் உடன்படுகின்றோம். தமிழ் மக்களுக்கு மட்டும் வீடு வழங்கப்பட வேண்டுமென்றோ முஸ்லிம் மக்களுக்கு வீடு வழங்கப்படக் கூடாதென்றோ நாம் ஒருபோதும் வலியுறுத்தியது கிடையாது. போரால் மிக கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களாதலால் வீட்டுத்திட்ட முதற் கட்டங்களில் முன்னுரிமை வழங்குங்கள் என்பதே எமது கோரிக்கையாகும். எமது கோரிக்கையின் நியாயபூர்வ தன்மையினை உணர்ந்து விரைவில் வீட்டுத்திட்டம் எமக்கு கிடைக்கப் பெற ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-250-266)

## எழுத்தாக்க திறன் போட்டி

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கான எழுத்தாக்க திறன் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பாடசாலை மட்டத்தில் இடம் பெற்ற போட்டிகளில் முதலாமிடத்தினைப் பெற்றவர்களை கலந்து கொண்டு போட்டியிடுமாறு வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார். (அ-2-266)

## ரயில் கட்டணங்களில் மாற்றம் இல்லை

(கொழும்பு)

புகையிரதக் கட்டணங்களில் மாற்றம் செய்யப்படமாட்டாதென புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது அறவிடப்படும் புகையிரதக் கட்டணமே தொடர்ந்தும் அறவிடப்படுமென புகையிரதப் பொது முகாமையாளர் விஜய சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட தூர பிரயாணங்களுக்காக நாளாந்தம் இலட்சக்கணக்கான பிரயாணிகள் புகையிரதத்தைப் பயன்படுத்துகின்றனர். அலுவலக புகையிரதங்களுக்கும் கூடுதலான தேவை இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த் புகையிரதச் சேவையை நாம் தொடர்ந்தும் வழங்குவோமென்றும் பொது முகாமையாளர் தெரிவித்தார். (அ-2)

# ஆயுர்வேத வைத்தியரின் தாலிக்கொடி அறுப்பு

## பத்துப் பவுண் பறந்தது

(கரவெட்டி)

வடமராட்சி கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடி பகுதியில் ஆயுர்வேத வைத்தியர் ஒருவரின் தாலிக்கொடி திருடர்களால் நேற்று அதிகாலை அறுத்து செல்லப்பபட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கரணவாய் மூத்த விநாயகர் கோவில் பகுதியில் உள்ள தனது வீட்டில் அவ் வைத்தியர் அதிகாலை தண்ணீர் குழாயில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்த வேளை மறைந்திருந்த திருடன் திடீரென வைத்தியரின் தாலிக்கொடியை அறுத்ததுடன் அவருடைய காதையும் அறுத்து காயப்படுத்தி தப்பிச்சென்றுள்ளார். 10 பவுண் தாலிக் கொடியை திருடனிடம் பறிகொடுத்ததுடன் தனது காதிலும் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தோட்ட வெளியூடாக வந்த திருடர்களே இக் கைவரியை காட்டியுள்ளனர். திருடர்கள் கொண்டு வந்த துவிச்சக்கரவண்டி, செருப்பு, என்பன அப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. திருடர்களால் கொண்டு செல்லப்பட்ட பூசகரின் தேசிய அடையாள அட்டை வீட்டின் வெளிப்பகுதியிலிருந்து பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் கரணவாய் மத்தியை சேர்ந்த கணேசமூர்த்தி சசிகலா (வயது 50) என்ற ஆயுர்வேத வைத்தியரே இத்துயர சம்பவத்திற்கு உள்ளானவர் ஆவார்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-3-24-60)

## கோட்ட மட்ட கபடி போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வவுனியா கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கபடி போட்டி முடிவுகளை கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.பி. நடராஜா அறிவித்துள்ளார்.

இதற்கமைய 15 வயது கீழ் பிரிவில் பெண்கள் பிரிவினருக்கான போட்டியில் பூவரசன்குளம் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும் 15 வயது கீழ் பிரிவில் ஆண்களுக்கான போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் முதலாம் இடத்தினையும் பூவரசன்குளம் மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தினையும்பெற்றுள்ளன.

19 வயது பெண்கள் பிரிவினருக்கான போட்டியில் பூவரசன்குளம் மகாவித்தியாலயம் முதலாம்இடத்தினையும் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மற்றும் ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன. (அ-2-266)


இவர்களுக்கு மணமகன் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 1<br>உயரம்: 5'7"<br>கி.பா: 75, 8 இல் செவ்.<br>தகைமை/தொழில்: MBBS Dr<br>தொ.இ: G -1421 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1440 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 26<br>தகைமை/தொழில்: O/L<br>மின் இணைப்பாளர்<br>தொ.இ: G -1423 | பிறப்பு: 1989 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>உயரம்: 5'<br>தகைமை/ தொழில்: O/L<br>தொ.இ: G-1441 |
| பிறப்பு: 1970 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: A/L<br>அவுஸ்திரேலியா (Not-PR)<br>தொ.இ: G -1424 | பிறப்பு: 1971 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>உயரம்: 5'4"<br>கி.பா: 72, 1 இல் செவ்<br>தகைமை/ தொழில்: O/L<br>தொ.இ: G -1444 |
| பிறப்பு: 1975 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: O/L,<br>தொ.இ: G -1429 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்:5'3"<br>கி.பா: 52.25, 1 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L, HND<br>பகுதி நேர ஆங்கில ஆசிரியர்<br>தொ.இ: G -1449 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய மகளிருக்கான தொலைபேசியூடான கற்றல்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 25-III

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பெண்களுக்கான கல்வி பற்றி பலரும் பலவாறாக பேச்சில் திட்டங்களை செயற்படுத்தினாலும் நடைமுறையில் அதனை செயற்படுத்துவது மிகவும் அவசியமானது ஆகும். அநேகமாக நாமெல்லோரும் வாய்ச் சொல்லில் வீரரடி என்பதன் அர்த்தம் தான் இதுவாமோ.

வீட்டுக்குள் பூண்டி வைத்த பெண்கள் தமக்கிருக்கும் திறமைகளை வெளிக்கொணர்ந்து ஆணுக்கு சரிநிகர் சமானமாக வாழ்ந்து கொண்டிருப்பதனை இப்போது பல இடங்களிலும் காணலாம். கல்வியில் தங்களது அபாரத் திறமைகளை பெண்கள் வெளிப்படுத்தும் காலத்தில் நாமெல்லோரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கல்விச் சாலைகளில் குறிப்பாக பல்கலைக்கழகங்களில் மகளிர் எண்ணிக்கை அதிகமாக இருப்பதற்கு இதுவே சான்றாகும்.

பெண்களுக்கான சலுகைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கைகள் பரந்தளவில் எழும் இந்நேரத்தில் இந்த வாய்ப்பை மிகச் சிலர் பயன்படுத்திக் கொண்டு தங்களை மட்டும் முன்னேற்றுவதை குறிக்கோளாக கொண்டிருப்பதுடன் ஏனையவர்களின் வளர்ச்சியில் அக்கறை கொள்ளாமலும் இருப்பது வேதனையளிக்கின்றது. பெண்களுக்கெதிரான வன்முறைகள் கட்டுக்கடங்காமலிருப்பதும் அதனை ஆண்கள் மனதால் உணர்வால் அவர்களுக்குள்ள பிரச்சினைகளிலிருந்து விடுவிக்க பாடுபட வேண்டும்.

பெண்களின் விடுதலைக்காக மகாகவி பாரதியார் பொங்கியெழுந்ததும் செல்லம்மாவை உதாரணமாக்கி காவியங்கள் படைத்ததும் இதனால் தான்.

கற்றவர்கள் மத்தியில் பெண்களை சரிசமமாக வைத்து மதித்து நடப்பது அரிதாகவே இருக்கின்றது. இத்தனை பிரச்சினைகளுக்கும் மத்தியில் பெண்கள் தமது திறமையால், ஆற்றலினால் உயர்ந்தெழுந்து உயர் பதவிகளில் அமரும் போது பலவாறான நெருக்கீடுகளுக்கு முகங்கெடுக்க வேண்டியும் இருக்கின்றது.

அதிலும் திருமணமாகாத பெண்களின் நிலைமை பரிதாபத்துக்குரியது. வெறுமனே ஒரு பெண்ணை பாலியல் ரீதியாக தொந்தரவு செய்வதும் வாகனங்களில் அங்கசேஷ்டை செய்வதும் பொது இடங்களில் அவமதிப்பதும் எங்களூரிலும் இன்னும் நடக்கின்றது.

கோபுரத்தில் பெண்களை வைத்து அன்னையை கொண்டாடுபவர்களும் உண்டு.

அதேவேளையில் அதிகாரம் தலைக்கேறி அந்த ஆசையில் பெண்களை அடிமையாக்க நினைப்பவருமுண்டு. ஆண்களாக மனம் மாறி பெண்களுக்கான உரிமைகளை விட்டுக் கொடுத்து அவர்களும் முன்னுக்கு வர வேண்டும் என்பதை மனதளவில் உணர்ந்து நடக்கும் காலம் வரும்போது நாங்கள் எதிர்பார்த்த பெண்களுக்கான சுதந்திரம் என்பது முழுமைபெறும்.

எங்களது கலாசார சீரழிவிற்கு பெண்களது நடவடிக்கைகளும் காரணம் என பலரும் முணுமுணுப்பதுவும் கேட்கின்றது. அலுவலகங்களில் வஞ்சம் தீர்ப்பது, வயதிற்கு மரியாதை கொடுக்காதிருப்பது, உயரதிகாரியுடன் தேவையற்று முரண்படுவது இவையெல்லாம் பொறுப்புணர்வுள்ள பெண்களால் நடக்கிறது எனும் போது ஆச்சரியப்படவும் தோன்றுகின்றது.

என்னதான் மேற்கைத்தேய மோகம் எம்முள் வந்தாலும் எமது கலை, கலாசார பண்புகளுடன் வாழும் வாழ்க்கை புனிதமானது. எங்களுக்குள்ளே இருக்கின்ற சுயநலத்தை வெளியிலெடுத்து ஒரு நாளில் ஒரு மணித்தியாலமாவது பொதுநலம் நோக்கி சிந்திப்போமாகில் நாங்களாகவே பல விடயங்களை செய்வதற்கு உதவி செய்யலாம்.

தொலைபேசி தொழில்நுட்பம் இவையெல்லாவற்றுக்கும் இனி உதவி செய்யப் போகின்றது.

பெண்களுடைய கல்வி சார்ந்து அவர்களை அறிவு ரீதியாக வலுவூட்டுவதற்காக பல விடயங்களில் பயன்தரப் போகின்றது.

# தற்கொலை போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்ததது நம் நாடு

## வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹணே

தற்கொலைப் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை சமூகத்துடன் மீள இணைத்த ஒரே நாடாக இலங்கை திகழ்கின்றது. இவ்வாறு ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹணே தெரிவித்துள்ளார்.

உலகின் வேறு எந்த நாட்டிலும் இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் 230 தடவைக்கு அதிகமாக தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் இதில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதாகவும் இவர் குறிப்பிட்டுள்ளார். மத்திய வங்கி மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஆயிரத்து 400 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

உலகப் பயங்கரவாதிகள் பலர் தற்போது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை பயன்படுத்தி வருகின்ற போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலை முதலில் அறிமுகம் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். தற்கொலைப் போராளிகளின் குடும்பங்களுக்கு புலிகள் காணிகளை வழங்கி ஊக்குவித்ததாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஐ.நாவில் உரையாற்றுவார் பாரதவின் சகோதரி சுவர்ணா

(கொழும்பு)

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் குடும்பத்தைச் சேர்ந்த ஆறு அங்கத்தவர்கள் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில் ஒருவர் இலங்கையின் அரசியல் படுகொலைகளைப் பற்றி உரையாற்றவுள்ளார்.

ஜெனீவா மனித உரிமைகள் அமர்வில் உரையாற்றுவ தற்காக பிரேமச்சந் திர குடும்பத்தினரு க்கு மனித உரிமை பேரவை அழைப்பு விடுத்த தாக பிரேமச்சந்திரவின் மூத்த சகோதரி சித்திரா பிரேமச்சந் திர தெரிவித்தார்.

சித்திராவுக்கு மற்றும் சகோதர சகோதரிகள் யாவரும் கனடாவில் வாழ்கின்றனர். சுவர்ணா குணரத்னவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில்உரை யாற்றவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# பெரு விளையாட்டு போட்டிகள் இன்று

வவுனியா தெற்கு கல்வி வலைத்தின் பெரு விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மைதானத்தில் 19 வயது பிரிவு ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியும் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தில் 19 வயது பிரிவு ஆண், பெண்களுக்கான உடற்பயிற்சி போட்டியும் எறிபந்தாட்ட போட்டியும் இடம் பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை 19 வயது பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய மைதானத்திலும் 19 வயது ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானம் மற்றும் நகரசபை மைதானத்திலும் இடம்பெறவுள்ளது. இதேவேளை, இப்போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி நிறைவடையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-266)

# சுய தொழில் கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

(பூந்தோட்டம்)

வடமாகாண சமூக சேவை திணைக்களத்தினால் வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன் அறிவித்துள்ளார்.

சுய தொழில் கடன் பெறவுள்ளவர்களுக்கு முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம் என இரு கட்டங்களாக இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளன. கொடுப்பனவுகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் வவுனியா பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி பிறேமா விமலேந்திரனை தொடர்பு கொண்டு கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இதில் முதலாம் கட்ட சுய தொழில் கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்ட 57 பேரின் பெயர் விபரங்கள் வருமாறு,

பா.குக[illegible] ([illegible]), யோ. விம[illegible] ([illegible]), அ.ஜெய வேணி (புதுக்குளம்), கி.விஜயகுமாரி (இல.30,தாலிக்குளம்), ச.திரவியம்(தாஸ்நகர்), யோ.நகு லேஸ்வரி(மகாறம்பைக்குளம்), ச. கமலேஸ்வரி(தோணிக்கல்), தி.கௌரிமலர் (தோணிக்கல்), சு.திலகவதி (தோணிக்கல்), செ. பரமேஸ் வரி(பாலமோட்டை) க.செல்லாயி (சாஸ்திரி கூழாங்குளம்), இ.கிருபாதேவி (பாலமோட்டை), சு.புஸ்பலதா (பாலமோட்டை), ந.அரசினி (மகிழங்குளம்), க.மாசிலா (பாலமோட்டை), க.ராணி (கோயில்குஞ்சுக்குளம்), ப.அனோமா (பூவரசங்குளம்), வி.இராஜேஸ்வரி (பாலமோட்டை), ச. அசோகமாலா (கோயில்குஞ்சுக் குளம்), இ.யோகேஸ்வரி (கோயில்குஞ்சுக்குளம்), சு.மதனமாலா (கோயில்குஞ்சுக்குளம்), வி.சசிகலா(கோயில் குஞ்சுக்குளம்), ச.இலெட்சுமி (பாலமோட்டை), சி.துஸ்யந்தி (கோயில்குஞ்சுக்குளம்), ரா.நகு லேஸ்வரி (இல.38, தாலிக்குளம்), வி. புஸ்பராணி (மகாறம்பைளம்), அ.சுந்தரதேவி (இல.263, தாலிக்குளம்), கு. லட்சுமிகாந்தா (புன்றிக்கெய்தகுளம்), க.யோகராணி (பாலமோட்டை), செ. பழனியம்மா(இல.263, தாலிக்குளம்), தே.ஜெகசோதி (இல.247, தாலிக்குளம்), இ.சிந்தனைச் செல்வி(பூம்புகார்), பே.பாலேஸ்வரி (முல்லைக்குளம்), நா.இலட்சுமி (இல.48, தாலிக்குளம்), ஜெ.முன்னேஸ்வரி (இல.212, தாலிக்குளம்), அ.ராணி(மறவன்குளம்), ந.கமலா(சிதம்பரபுரம்), மு. கார்த்திகாயினி(சாஸ்திரிகூழாங்குளம்), யே. யோகரதி(கிழவிகுளம்), வா.ஜெசீமா (மதீனாநகர்), சே. ராணி(மருக்காரம்பளை), செ.சஞ்சலாதேவி(மகாறம்பைக்குளம்), பு.சரஸ்வதி (ஆசிக்குளம்), க.பவானி (துவசிக்குளம்), ஜெ.சுபாசினி (இல.88/5 கணேசபுரம்), த.புஸ்பராகம் (சாஸ்திரி கூழாங்குளம்), யோ.சதாசிவம் (மறவன்குளம்), நி.அமுதா(கற்பகபுரம்), பெ.கலா (ஆசிகுளம்), த.தேவகி(மகிழங்குளம்), தி.செல்வராணி (மருதமடு), ராணியம்மா (மதீனா நகர்), இரா.சோதியம்மா(காத்தர்சின்னகுளம் வீதி, சு.தவமலர் (மகாறம்பைக்குளம்), ஆ.மனோன்மணி (மகிழங்குளம்), சி. இலங்கநாயகி (சொந்தக்காரன்குளம்), வி.தெய்வராணி (கோயில் குஞ்சுக் குளம்). (அ-250-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநலத்திற்கான ஆர்ப்பாட்டத்தின் போது உங்கள் மனச்சாட்சியை தட்டிப்பாருங்கள்!

## செல்வம் எம். பி. அறிக்கை

(மன்னார்)

**ஜெனீவா பிரேரணைக்கு எதிராகவும் அரசாங்கத்திங்கு சார்பாகவும் மன்னாரிலும் கிளிநொச்சியிலும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் சுயநலத்திற்காக மேற்கொள்ளப்பட்டதோடு பாதிக்கப்பட்ட மக்களை தொடர்ந்தும் துன்பத்தில் தள்ளும் ஒரு செயற்பாடாகவே காணப்படுவதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,**

மன்னாரிலும் கிளிநொச்சியி லும் அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் ஜெனீவா பிரேரணைக்கு எதிராகவும் அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக மன்னாரில்மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது கலந்து கொண்ட மக்கள் எதற்காக தம்மை அழைத்தார்கள் என்று தெரியாத நிலையில் கலந்து கொண்டுள்ளனர்.

மீள்குடியேறிய மக்கள் மற்றும் மீனவர்களின் பிரச்சினைகள் உடன் தீர்த்து தரப்படும் என கூறப்பட்ட நிலையில் அவர்கள் வாகனங்களில் ஏற்றிவரப்பட்டு குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வைக்கப்பட்டனர். ஆனால் விபரம் அறிந்த மன்னார் நகர மக்கள் அதில் கலந்து கொள்ளவில்லை.

இதேபோன்று கிளிநொச்சியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கிளிநொச்சி முன்பள்ளி ஆசிரியர்கள் பலவந்தப்படுத்தி அதில் அழைத்து வரப்பட்டு கலந்து வைக்கப்பட்டுள்ளனர்.

சொற்ப அளவு ஊதியம் பெற்றுக் கொள்ளும் நிலையில் குறித்த ஆசிரியர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மாணவர்களுக்கு வழங்கும் நிலையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கும் நிலையில் அந்த ஆசிரியர்கள் குறித்த ஆர்ப்பாட்டத்திற்குபலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதனால் அந்த மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது.முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் அனைத்தும் உண்மைஇல்லையா?என்பதனை இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்திய வர்களிடம் நான் கேட்க விரும்புகின்றேன்.

சுய நலத்திற்காக இந்த ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பவர்கள் சற்று உங்கள் மனச்சாட்சியை தட்டிப் பாருங்கள். முள்ளிவாய்க்காலில் நடந்தவற்றை மூடி மறைக்க நினைக்காதீர்கள். முள்ளி வாய்க்காலில் நடந்த சம்பவம் எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி ஆகியவற்றை கொச்சைப்படுத்துகின்ற வகையில் குறித்த இரண்டு ஆர்ப்பாட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவே நாங்கள் கருதுகின்றோம்.

தனிப்பட்ட உங்களின் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இப்படிப்பட்ட ஆர்ப்பாட்டங்களை செய்ய துடிக்கின்றீர்கள்.

தயவு செய்து தமிழ் மக்களின் துன்ப துயரத்தில் குளிர்காய வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன். இந்தியாவில் சட்டக் கல்லூரி மாணவர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக உண்ணா விரதப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அதனை நாங்கள் மதிக்கின்றோம் ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகித்துள்ளவர்கள் தமது சுய நலத்திற்காக இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றனர்.

இதனை தமிழ் மக்கள் சார்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது.

எனவே தமிழ் மக்கள் பட்ட துன்பங்களுக்கு உங்களால் குரல் கொடுக்க முடியாது விட்டாலும் பரவாயில்லை தமிழ் மக்கள் பட்ட துன்ப துயரங்களை மூடிமறைக்க வேண்டாம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## முஸ்லிம் மக்கள் மீதான அச்சுறுத்தல் குறித்தும் அமெ. தீர்மானத்தில் தகவல்

ஐக்கியநாடுகள்மனிதவுரிமைப்பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்படும் தீர்மானத்தில் அண்மைக்காலமாக முஸ்லிம் எதிர்கொள்ளும் இனவாத அச்சுறுத்தல் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரில் நடந்ததாகக் கூறப்படும் மனிதவுரிமைகள் மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவை தற்போதைய அமர்வில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம் தொடர்பில் 21 ஆம் திகதி விவாதங்கள் இடம் பெறவுள்ளது.

இந்நிலையில் இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானத்தில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் இனவாத அச்சுறுத்தல் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## சீனாவுடன் பேச்சு நடத்துங்கள்; ஜப்பானுக்கு மஹிந்த ஆலோசனை

இலங்கையின் இனப் பிரச்சினை தீர்வுக்காக தமிழ் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜப்பானிடம் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் காணப்படும் முறுகல் நிலையைத் தணிக்க பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு ஜப்பானுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜப்பானுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி நேற்று முன்தினம் ஜப்பானின் பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன்போது சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் பிரச்சினையாக காணப்படும் சீனாவின் கிழக்கு பகுதியில் உள்ள தீவு தொடர்பில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். எந்த பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தையே தீர்வு என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## வெலிக்கடை சிறைக்கைதி வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கைதிகளில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதையடுத்து அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதியொருவர் தமக்கு விடுதலை அல்லது மரணதண்டனையை துரிதமாக நிறைவேற்றுமாறு வலியுறுத்தி சிறைச்சாலையின் கூரை மீதேறி தமது போராட்டத்தை ஆரம்பித்தார்.

அதன் பின்னர் மேலும் இரண்டு மரண தண்டனைகைதிகள் அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவரின் உடல் நிலை மோசமானதையடுத்தே அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் சிறைக்கைதிகள் மூவரும் தங்களுடைய உண்ணாவிரத போராட்டத்தை நிறைவுக்கு கொண்டு வந்துள்ளதாக் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)



முள்ளியவளை நாவற்காடு பகுதியில் நீண்டகாலமாக இயங்கி வந்த சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பாதிகாரி கொண்ட குழுவினால் சுற்றி வளைக்கப்பட்டு, கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தி வந்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### பிறரைப் பொய்மையின் படி தீர்ப்பிடாது எச்சரிக்கையாய் இருப்போம்



மெசியா (இயேசு) இவரே என்று சிலர் கூற மற்றும் சிலர் கலிலேயாவிலிருந்தா மெசியா வருவார்? தாவீதின் மரபிலிருந்தும் அவர் குடியிருந்த பெத்லகேம் ஊரிலிருந்தும் மெசியா வருவார் என்றல்லவா மறைநூல் கூறுகிறது? என்றனர். இப்படி அவரைக் குறித்து மக்களிடையே பிளவு ஏற்பட்டது. சிலர் அவரைப் பிடிக்க விரும்பினர். ஆனால் யாரும் அவரைத் தொடவில்லை. மாறாக அவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுக்குச் சென்றார்கள் என்று இன்று வேதாகமத்தில் இருந்து எமக்கு தரப்படுகின்ற பகுதியை நோக்கும் போது ஒரு இறை மனிதனை ஆண்டவனின் அடியானை, உண்மையாக்கும் நீதிக்கும் சாட்சியாக வாழும் மனிதனை, நற்செயல் செய்து வாழும் நல்லவனை தொடுவது என்பது அவ்வளவு எளிதல்ல என்று எமக்கு நன்கு புலப்படும். எதிரிகளிடையே கருத்து வேறுபாடு உண்டாகும். இயேசு கலிலேயரா யூதரா? பெத்லகேம் மெசியாவா நாசரேத்து இயேசுவா? சட்டமும் காவல் துறையும் அதிர்ந்து போய்விடும். இயேசுவை கைது செய்ய சென்றவர்கள் அவரைப் போல எவருமே என்றுமே பேசியதில்லை என்ற அதிர்ச்சி தகவல் கொடுத் தனர்.நாம் நல்ல வாழ்வு வாழும் பொழுது எங்கள் தூய வாழ்வை நற்செயல்களைக் காண்போர் எங்களுக்கு சான்று பகர்பவர், சான்றோர், பெரிய மனிதர்கள் எங்கள் சார்பில் பேசுவார்கள்.


ஒருவரின் வாக்கு மூலத்தை கேளாது, அவர் என்ன செய்தார் என்று அறியாது ஒருவருக்குத் தீர்ப்பளிப்பது நமது சட்டப்படி முறையாகுமா? என்று நிக்கதேமு கேட்கும் பகுதியும் பின்பு இன்றைய வேதாகமப் பகுதியாக தொடர்கின்றது. நிக்கதேமு ஒரு பரிசேயர், நல்லவர், நீதிமான், இவர் இயேசுவின் விசாரணையில் இவ்வாறு கேட்பதன் மூலம் நிலை தடுமாறும் நீதிக்கு ஒரு ஊன்றுகோல் வழங்கினார். பல நேரங்களில் என்ன நடந்தது என்பதை தொடர்பு உள்ள மனிதரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் வதந்திகளையும் அவதூறு செய்திகளையும் எளிதில் நம்பவைத்து என் உண்மைகளையே மறைத்து பொய்மை களையே உலகிற்கு உண்மையாக்க முனையும் எமக்கும் உண்மை உரைப்பவர்களை உலகிலிருந்து அகற்றத்துடிக்கும் எமக்கு ஓர் எச்சரிக்கையாக அமைகின்றன. இந்த நிக்கதேமுவின் வார்த்தைகள். நீதி நேர்மையின் படி வாழும் போது எங்களுக்கும் ஒருவர் உதவி புரிய வருவர். இயேசுவுக்கு நிகழ்ந்தது போலவே எங்களுக்கும் நிகழும். எதிரிகளிடையே கருத்து வேறுபாடு உண்டாகும். எங்களை வழிநடத்துவதாக தப்பட்டம் கூறி எங்களிடையே வாழும் தலைவர்கள் ஒவ்வொருவரும் வாய்பொத்தி அவரவர் [illegible] எவரும் எங்களைத் தொடமாட்டார்கள். எனவே பிறரைப் பொய்மையின்படி தீர்ப்பிடாது எச்சரிக்கையாய் இருப்போம் பாவத்திலிருந்தும் நம்மைக் காத்துக் கொள்வோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

# 14.03.2013-13.04.2013



## துலாம்

சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

**வழிபாட்டின் மூலலே வளர்ச்சி காண வேண்டிய மாதம்!**

**நீதிக்கும் நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் துலாம் இராசி நேயர்களே!**

### உங்களை விட்டு விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர்

### பக்கபலமாக இருப்பவர்களின் ஒத்துழைப்போடு இனிய வாழ்க்கை அமையும்

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஜென்ம சனி, ஜென்ம ராகுவின் ஆதிக்கம் காணப்படுகிறது. அதோடு மட்டுமல்ல செவ்வாய் சனியை பார்க்கும் நிலை உள்ளது. இவை அனைத்தும் நிம்மதி இழப்பையும் நிறைய விரயங்களையும் கொடுக்கும் சூழ்நிலையை காட்டுகிறது. பக்கபலமாக இருப்பவர்களை உங்களை விட்டு பிரிய வைக்கும் குரு 2 ஆம் இடத்தைப் பார்ப்பதால் மீண்டும் புதியவர்களை இணையவும் வைக்கும். இப்படிப்பட்ட சூழ் நிலையில் நீங்கள் எந்த முடிவும் எடுக்க முடியாது. எடுத்த முடிவையும் திடீர் திடீரென மாற்றிக் கொள்வீர்கள். படபடப்பும் பதட்டமும் குடிகொள்ளும். எனவே, இதுபோன்ற காலங்களில் ஆலய வழிபாடு ஆன்மிக பயணங்களை மேற்கொள்வது நல்லது. அதேநேரத்தில் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு கூடும். இதை விட்டுவிட்டு வேறு வேலையில் சேரலாமா? என்ற சிந்தனை மேலோங்கும். எங்கு சேர்ந்தாலும் இதே நிலைதான் என்பது வேறு வேலையில் சேர்ந்த பின்னர்தான் தெரியும். வரவைக் காட்டிலும் செலவு கூடும். இந்த நேரத்தில் கூட்டாளிகளின் குணமறிந்து நடந்து கொள்வது நல்லது.

உங்கள் இராசிநாதன் உச்சம் பெறும் நேரத்தில் ஓரளவு நன்மை தந்தாலும் ஜென்ம சனியும் ஜென்ம ராகுவும் மனக் கசப்பு தரும் சம்பவங்களை நிறையவே சந்திக்க வைப்பர். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைத்துக் கொள்ளுங்கள். நன்மைகள் நடைபெற நாளும் ஆனைமுகப்பெருமானை வழிபாடு செய்யுங்கள். அருகம்புல் மாலையினை ஆனைமுகனுக்கு சூட்டி விநாயகர் கவசம் பாடுங்கள். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்பால் வியக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும். கிரகங்கள் பலம் இழந்திருக்கும் நேரத்தில் முறையான வழிபாடுகளை மேற்கொண்டால் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும்.

உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!

உங்கள் இராசிநாதன் மார்ச் 18 ஆம் திகதி உச்சம் பெறுகிறார். இராசி நாதனாகவும் அஷ்டமாதிபதியாகவும் இருக்கும் ஒரு கிரகம் மறைவிடத்தில் உச்சம் பெறும்பொழுது திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். தித்திக்கும் செய்திகள் வீடு வந்து சேரும். உங்களை விட்டு விலகி சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். பக்கபலமாக இருப்பவர்களின் ஒத்துழைப்போடு தக்க விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள்.

மீன புதனின் சஞ்சாரம்!

மீன இராசியில் புதன் ஏப்ரல் 4 ஆம் திகதியன்று நீச்சம் பெற்று சஞ்சரிக்கப்போகிறார். 12 க்கு அதிபதி நீச்சம் பெறும்போது மேலும் நற்பலன்களை வழங்கும். குறிப்பாக பயணங்களால் பலன் உண்டு. அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

செவ்வாய், சுக்ரனின் மேஷ சஞ்சாரம்!

மேஷ ராசியில் ஏப்ரல் 10 ஆம் திகதி செவ்வாயும் மறுநாள் சுக்ரனும் சஞ்சரிக்கப்போகிறார்கள். இக்காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி உங்களுக்குத் தேவை. கடை சிறப்பாக நடைபெறவில்லையே, கம்பெனி சிறப்பாக நடைபெறவில்லையே என்று கவலைப்படுவீர்கள். உற்சாகம் குறையாமல் பணிபுரிவது நல்லது. சகோதரர்களால் விரயம் உண்டு. குடும்பத்தினரை அனுசரித்துச் செல்லுங்கள். அப்பொழுதுதான் மகிழ்ச்சியை தக்கவைத்துக் கொள்ள இயலும். சுக்ரனின் பார்வை இராசியில் பதிவதால் வருமானம் திருப்திகரமாகவே இருக்கும்.

இம்மாதம் ஆஞ்சநேயர் வழிபாடும் துர்க்கை வழிபாடும் அமைதியை வழங்கும். யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்தியை செய்து கொள்வது நல்லது.

இம்மாதம் அமைதியை கடைப் பிடிக்க வேண்டிய மாதமாகும். குடும்பத்தினர்களை அனுசரித்து செல்லுங்கள். கொடுக்கல்-வாங்கல்களில் விழிப்புணர்ச்சி காட்டுங்கள். குடும்ப பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் சொல்லாமல் இருப்பது நல்லது. பாசம் காட்டுவதன் மூலமும் நேசம் காட்டுவதன் மூலமும் பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கையை கூட்டிக் கொள்ளலாம். சகோதர பகைகள் உருவாகாமல் இருக்கவும் கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படவும் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சர்ப்ப சாந்தியும் அங்காரக வழிபாடும் முறையாக செய்தால் சந்தோஷங்கள் வந்து சேரும்.

# சிவல்புரி சிங்காரம்



## விருச்சிகம்

விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**நூதன பொருட்கள் சேர்க்கை ஏற்படும் நேரம்!**

**முன்யோசனையுடன் செயற்பட்டு முயற்சிகளில் எல்லாம் வெற்றியை வரவழைத்துக் கொள்ளும் விருச்சிக இராசி நேயர்களே!**

### இம்மாதம் பல விதங்களில் நன்மையையே உங்களுக்கு வழங்கும்

### பொருளாதாரநிலை உயரும் இந்த நேரத்தில் பொருட்சேர்க்கை உண்டு

இந்த பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, பல கிரகங்கள் உங்களுக்கு சாதகமான நிலையிலேயே சஞ்சரிக்கின்றன. குறிப்பாக புத சுக்ர யோகத்தோடும் சந்திர மங்கள யோகத்தோடும் குருவின் பார்வை பலத்தோடும் தொடங்கும் பங்குனி மாதம் பல விதங்களில் நன்மையை உங்களுக்கு வழங்கும். வாரிசுகளாலும் நன்மை ஏற்படும். பொருளாதாரநிலை உயரும். இந்த நேரத்தில் நூதன பொருட்சேர்க்கை அதிகரிக்கும். தங்கம், வெள்ளி, ஆடை, வாகனங்கள் வாங்க முன்வருவீர்கள். சொத்துக்கள் வாங்குவது சம்பந்தமாக எடுத்த முடிவில் சில மாற்றங்களை செய்யும் சூழ்நிலை உருவாகும். செவ்வாய் பலம் இழந்து இருப்பதாலும் அது பார்க்கும் சனி வக்ர இயக்கத்தில் இருந்து கொண்டு ஏழரைச்சனியின் ஆதிக்கத்தை நடத்துவதாலும் சில காரியங்களை யோசித்து செய்வதே நல்லது.

செவ்வாய் தோறும் வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபாடு செய்யுங்கள். அவளுக்கு பூமாலையும் பாமாலையும் சூட்டி வழிபட்டால் அனைத்து காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். சுக ஸ்தானத்தில் புதனும் சுக்ரனும் இணைந்து மாதம் தொடங்குவதால் பொருளாதார நிலை உயரும். பூமி லாபம் உண்டு. பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். இனத்தார் பகை மாறும். இதுவரை நடைபெறாத காரியங்கள் அனைத்தும் இனி துரிதமாக நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வார்கள். குரு பார்வை வலிமையோடு இருப்பதால் நண்பர்கள் நாளும் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். வி.ஐ.பிக்கள் விரும்பிய காரியங்கள் முடித்துக் கொடுப்பர். ஏழரைச்சனியின் இரண்டாவது சுற்று நடப்பவர்கள் இமயம்போல் உயரும் அளவிற்கு வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கும். முதற்சுற்று அல்லது மூன்றாவது சுற்று நடப்பவர்கள் யோசித்தும், தெய்வத்தை பூஜித்தும் தெய்வ பதிகங்களை வாசித்தும் வழிபாட்டை மேற்கொண்டு காரியங்களை செய்தால் வளர்ச்சி மேல் வளர்ச்சி வந்து சேரும்.

சுகம் தரும் சுக்ர பெயர்ச்சி!

மீனத்தில் மார்ச் 18 ஆம் திகதி சுக்ரன் உச்சம் பெறப்போகிறார். சப்தமாதிபதி உச்சம் பெறும் இந்த நேரத்தில் கல்யாண பேச்சுக்கள் முடிவாகும். தங்கள், வெற்றி வாங்குவதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும். ஒவ்வொரு நாளும் பயணங்கள் உண்டாகும். அதனால் பலன்களும் கிடைக்கும். வாழ்க்கை துணையின் உத்தியோக நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

மீன புதனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 4 ஆம் திகதி புதன் மீன இராசிக்கு செல்கிறார். அஷ்டமாதிபதி நீச்சம் பெறுவதால் ஆரோக்கியம் சீராகும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். குல தெய்வ வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள்.


**செவ்வாய் பெயர்ச்சியும் சுக்ர பெயர்ச்சியும்!**

ஏப்ரல் 10 ஆம் திகதி செவ்வாய் மீன இராசியில் செல்கிறார். ஏப்ரல் 11 ஆம் திகதி அதே வீட்டிற்கு சுக்ரனும் வருகிறார். சுக்ரன் தன் வீட்டை தானே பார்ப்பதால் விரய ஸ்தானம் புனிதமடைகிறது. அதே நேரத்தில் செவ்வாய் சனியை பார்க்கிறார். எனவே, ஆரோக்கியத்தில் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். [illegible] இடம், பூமிகளை விற்று லாபம் காண்பர். என்ன இருந்தாலும் செவ்வாய், சனி பார்வைக்கு உரிய பரிகாரங்களை செய்து கொள்வதுதான் நல்லது. இம்மாதம் ஆனைமுகப்பெருமான் வழிபாட்டையும் ஆறுமுகப்பெருமான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். சீரும் சிறப்பும் செல்வாக்கும் உயரும்.

இம்மாதம் இனிய மாதம்தான். ஏழரைச் சனி நடப்பதால் சுப விரயங்கள் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்குவீர்கள். அவர்களின் எதிர்கால நலன் கருதி ஆபரணம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். வீடு வாங்கும் முயற்சியில் அனுகூலம் கிட்டும். சர்ப்ப சாந்திகளை முறையாக செய்துகொள்வது நல்லது. வாலில் மணி கட்டிய ஆஞ்சநேயரை வழிபட்டு வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செவ்வண்ணம் உறைந்து கிடக்கும் உன் அதரங்களை நான் திருட்டுத்தனமாய்த் தீண்டியிருக்கிறேன். ஒரு பயணத்தில் தாகத்திற்கு இளநீர்

அடைகாக்கப்படாத முட்டையும் கூட சூடு பொறுக்காமல் சிலநேரம் தானே பொரிந்துவிடும் என்பார்கள். நீயோ நானோ வெடித்துவிடுவதற்குள் சொல்லிவிடு.

அதிர்ச்சி அடைவேன் என்று பார்க்கிறாயா? உணர்ச்சிவசப்பட்டு எலும்பு நொறுங்க ஆலிங்கனம் செய்துவிடுவேன் என்று அஞ்சுகிறாயா? எவ்வளவு உயரம் பறந்தாலும் விழுந்து விடாத பறவை நான். இத்தனை நாட்கள் கட்டுப்பாடு காத்தவன் இனியும் தூக்க மாட்டேனா? ஒருவேளை... கட்டுப்பாடு கடப்பதையே நீ விரும்புவாயா?

என் மனவோட்டம் புரியாமல் நீ வேறு திசை பார்க்கிறாய். பாறையோரத்துக் கள்ளிச் செடியில் பால் வழிய வழிய நகம் கிழிக்கிறாய்.

கள் பெருமூச்சுகளாகிவிட்டன. சொல்லிவிடு எமிலி. வெளியேற முடியாத காற்று பலூனை உடைத்துவிடுகிறது; வெளியேற முடியாத வார்த்தை எதை உடைக்கப்போகிறதோ?

உன் வானவேடிக்கை முடிந்தது; திரும்புகிறாய். என்னை இப்பொழுது ஏறெடுத்துப் பார்க்கிறாய். துக்கம் தாங்குவதற்கு இருதயம் மட்டும் பலமாயிருந்தால் போதும்; ஆனால், சந்தோஷம் தாங்குவதற்கு உடலும் உயிரும் பலமாக இருக்க வேண்டும். இரு. இரண்டையும் பலப்படுத்திக் கொள்கிறேன்; இப்போது சொல். ஆகா... பேசிவிட்டாய்.

சின்னப்பாண்டி... இந்தச்

பயிர் கருகியது கண்டு உயிர் மாய்த்துக்கொண்ட ஒரு விவசாயக் குடிமகன் பற்றி எடுத்துக்கூறும் "மூன்றாம் உலகப் போர்" எனும் நூலின் ஊடாக கிடைக்கப் பெறும் வருமானத்தை, தற்கொலை செய்து கொண்ட விவசாயக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்போவதாக இந்நூலினை எழுதிய கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

இலக்கிய சிந்தனை அமைப்பின் சார்பில் இவ்வாண்டுக்கான இலக்கிய சிந்தனை விருது கவிஞர் வைரமுத்துவின் "மூன்றாம் உலகப்போர்" எனும் நூலிற்கு வழங்கப்படவுள்ளதாக இலக்கிய சிந்தனை அமைப்பின் அறங்காவலர் இலட்சுமணன் வெளியிட்டுள்ளார்.

இவ்விருது எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12 ஆம்திகதி நடைபெறும் விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

அத்துடன் ஒரு குடும்பத்துக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் 11 குடும்பத்திற்கும்11 இலட்சம் ரூபா வழங்கப்படும் என்பதையும் அவர் கூறியுள்ளார்.

# மூன்றாம் உலகப்போர்

## 73 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

கேட்டாய். இளநீரை வாங்கி வந்து நீட்டினேன். ஸ்ட்ரா இல்லையா என்றாய். அப்படியே அருந்து என்றேன். பழக்கமில்லையே என்றபடி அண்ணார்ந்து குடிக்க முயன்றாய் மூச்சுக் குழலிக்குள் இளநீர் இறங்கப் புரையோடிப்போன நீ இருமிச் செருமி இளநீர் சிந்தி என்னிடமே திருப்பித் தந்தாய். எங்களூர் சாங்கியத்தில் தலையைத் தட்டும் சாக்கில் உன்னை ஸ்பரிசித்தேன். இளநீரில் நீ எச்சில் வைத்த மிச்சத்தை நான் பருகுகிறேன்.

என்ன ஆச்சரியம் இளநீர் கரித்தது; நீ வாய் வைத்த இடம் மட்டும் தித்தித்தது. உதடுபட்ட இடத்தில் உதடுபட்டதால் உதடுபடாமலே உடுபட்ட தித்திப்பை அந்தத் திருட்டுத் தீண்டல் தந்தது பெண்ணே... அதன் பிறகு நீ கண்காண எறிந்தேன் குடித்த இளநீர்க்கூட்டை; உன் கண்காணாமல் எறிந்தேன் என் பையில் மறைத்து வைத்திருந்த ஸ்ட்ராவை.

சொல்லியிருக்கலாம் உன்னை நான் சுற்றி வளைத்து நேசித்த கதையை. எண்ணெய் பூசிய கம்பத்தில் ஏறி ஏறி வழுக்கும் சிறுவனைப் போல ஒரு நூறு முறையாவது வழுக்கி விழுந்திருப்பேன் என் சொற்களோடு நானும். என் கைத் தொலைபேசியில் அதிகமாக அழுத்தப்பட்டதும் ஒருமுறைகூடப் பேசாததும் பெண்ணே உன் எண்ணேதான். இலட்சியங்களுக்குச் சக்கரம் கட்டி

chi...என் பெயர்தான்; என் பெயரைத்தான் எழுதுகிறாய்.

'chinna pandi' என்றுதான் நான் எழுதுவேன்.

நீயோ தமிழின் நெடுங்கணக்கு நெடுலுக்கேற்ப இரண்டு aa இட்டு 'paandi' என்று எழுதுகிறாய். கள்ளி எழுத்து அழியாமல் பெண்ணே... உள்



உள்ளத்து எழுத்து அழியுமா?

நீ சொல்ல வேண்டுமென்று நான்-நான் சொல்ல வேண்டுமென்று நீ. நம் இருவர் இழுப்புக்கு ஈடுகொடுக்க முடியாமல் கசிந்து நைகிறது காதல் கயிறு.

சூழலை நான் நேசிக்கிறேன். உலகத்தின் காற்றே இங்கிருந்துதான் உற்பத்தியாகிறதோ என்று தோன்றுகிறது எனக்கு. இங்கேயே வாழ்ந்துவிடக் கூடாதா என்று ஆசை வந்து வந்து போகிறது.

இங்கேயே வாழ்வதற்கு உங்கள் உலகம் உன்னை அனுமதிக்குமா எமிலி?

என் உலகம் வெளியே இல்லை. உள்ளேயே இருக்கிறது. நான்தான் என் உலகம். எனக்கு மட்டுமல்ல; எல்லோருக்கும் அப்படித்தான்.

இல்லை. என் உலகம் நான் மட்டு

உங்களைக் குறித்து ஒரு முடிவெடுப்பது நீங்களா? உங்கள் சமூகமா?

எனக்கான முடிவுக்கும் ஒரு சமூக சம்மதம் தேவைப்படுகிறதல்லவா?

தங்கள் மீது நம்பிக்கை இல்லாதவர்களே சமூகத்தைச் சார்ந்திருக்கிறார்கள். முதலில் உங்களை நம்புங்கள்; பிறகு சமூகத்தை நம்புங்கள்.

நம்பிக்கை என்பதுகூட சந்தர்ப்பம் தான்.

இப்போது என் வாழ்வின் நம்பிக்கையே நீதான் எமிலி.

நம்பிக்கையின் குரலுக்குச் செவி சாய்ப்பீர்களா?

நிச்சயமாக.

என்னோடு அமெரிக்கா வருவீர்களா?

அவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

நெஞ்சுக்குப் பக்கத்தில் வந்துவிட்டாய்... வா உள்ளுக்குள் சொல்லிக் கொண்டான்.

சொல்லுங்கள் சின்னப்பாண்டி... என்னோடு அமெரிக்கா வருவீர்களா?

உங்கள் மண் நல்லது; மக்கள் நல்லவர்கள்; உன்னத உழைப்பாளிகள். ஆனால், கற்கால உழைப்பை விட்டு முற்றிலும் விடுபடாதவர்கள். உங்கள் விவசாயத்தை நவீனப்படுத்த வேண்டும். இந்திய வேளாண்மை மரபும் நவீனத் தொழில்நுட்பமும் இணைந்து இங்கே விவசாயத் தொழிற்சாலைகள் உருவாக வேண்டும். என்னோடு வாருங்கள். தொழில்நுட்பம் பயிலுங்கள்; முதலில் உங்கள் மாதிரி கிராமத்தில் அமுல்படுத்துங்கள். உங்களை அழைத்துப்போகிறேன். விரைவில் திருப்பியும் அனுப்புகிறேன். அதற்கான செலவுக்கு நான் பொறுப்பு. இதை மனம் விட்டுப் பேசத்தான் உங்களைத் தனிமையில் சந்திக்க ஆசைப்பட்டேன். சமூகத்துக்காகத் தொண்டு செய்வதற்குச் சமூக சம்மதம் எதற்கு? எங்கே உங்கள் பாஸ்போர்ட்?

அவள் பேசப் பேச அவன் கண்களில் நீர்மேகம் நின்றது; காட்சிகள் மங்கலாயின.

காற்றலைக்குச் சிக்காத வானொலி போல் அவள் வார்த்தைகள் விட்டு விட்டுக் கேட்டன.

அந்தி கறுக்க- வழித்தடல் மயங்க மலைச்சரிவில் கதறிக் கொண்டே இறங்கியது மந்தையைப் பிரிந்த கன்று ஒன்று.

## முதலில் உங்களை நம்புங்கள்; பிறகு சமூகத்தை நம்புங்கள்

விடுவதும் வாழ்வுக்கு நங்கூரமிடுவதும் காதல்தான் என்று கண்டு கொண்டதும் உன்னைக் கண்ட பிறகுதான் எமிலி.

பேசு.

சாதகமான தீர்ப்புதான் என்றாலும் சாவதற்குள் சொல்லிவிடு.

சொல்லவந்ததைச் சொல் எமிலி.

என் காதலை உனக்குச் சொல்லியிருந்தாலும் சொல்லியிருப்பேன். நீயும் சராசரி இளைஞன்தானா என்று நீ என்னைக் கேட்டுவிடக் கூடாது என்றுதான் கேட்கவில்லை. ஏனென்றால் நானும் சராசரி இளைஞன்தான்.

உடைந்த மணியிலிருந்து காயத்தோடு வரும் ஒலியோடு என் உடைந்த இருதயத்திலிருந்து வரும் வார்த்தை

மில்லை.

உங்கள் உலகம் நீங்கள் மட்டுமில்லை என்பது எண்ணம். ஆனால், நீங்கள் மட்டும்தான் என்பது எதார்த்தம்.

மேற்கத்திய வாழ்க்கை முறைக்கும் இந்தியா வாழ்க்கை முறைக்குமான இடைவெளியில் நின்று பேசுகிறது உங்கள் குரல். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு சமூகச் சார்பு இருக்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ.தீர்மானம் உறுப்பு நாடுகளின் பார்வைக்கு

## சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரில் நடந்ததாகக் கூறப்படும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவை தற்போதைய அமர்வில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மான வரைவு உறுப்பு நாடுகளுக்கு சுற்றுக்கு விடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது**

இந்த வரைவுத்தீர்மானம் இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் தேசிய நடவடிக்கைத் திட்டமும் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டதாக எழுந்த பாரிய குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கவில்லை என்று கூறுகிறது.

மேலும் இலங்கையில் மனிதவுரிமைகள் மீறப்படுவதாக வரும் செய்திகள் மக்கள் காணாமல் போகடிக்கப்படுவது மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள் ஊடகவியலாளர்கள் போன்றோர் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாவது, நீதித்துறையின் சுதந்திரத்திற்கு எழும் அச்சுறுத்தல்கள் ஆகியவை குறித்து இந்தத் தீர்மானம் கவலை வெளியிடுகிறது.

மேலும் இலங்கை அரசு அரசியல் அதிகாரப் பரவலைச் செய்யத் தவறியது உட்பட வெளிப்படையாகக் கொடுத்த உறுதி மொழிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்றும் அந்த தீர்மான வரைவு கூறுகிறது.

மேலும் ஐ.நா.மன்ற மனிதவுரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்பு கூறலையும் மேம்படுத்த ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவி தருவது குறித்து வெளியிட்ட அறிக்கையை வரவேற்கும் இந்த தீர்மான வரைவு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தையும் மனித நேய சட்டத்தையும் மீறிய செயல்கள் குறித்து ஒரு நம்பகமான சுயாதீனமான சர்வதேச விசாரணையை கோரி ஆணையாளர் விடுத்த அழைப்பையும் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

இந்த ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் பரிந்துரைகளை இலங்கை அரசு அமுல்படுத்த வேண்டும் என்றும் அந்த தீர்மான வரைவு கோருகிறது.

மேலும் இலங்கை அரசு, ஐ.நா மன்ற நீதிபதிகள், சுதந்திரத்துக்கான சிறப்புத்தூதர் மற்றும் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் போன்ற குழுக்கள் இலங்கைக்கு வந்து செல்ல தங்கு தடையற்ற அனுமதி தருமாறும் இந்த வரைவுத் தீர்மானம் கோருகிறது.

இத்தீர்மான வரைவு பின்னர் வாக்கெடுப்புக்கு எடுத்து கொள்ளப்படக் கூடும். ஒட்டு மொத்தத்தில் இது ஒரு பலமான தீர்மானம்.

கடந்த வருடத்தில் இருந்து இது வாதங்களை மேலும் முன்னெடுத்துச் செல்கிறது என்று அம்னஸ்டி இன்டர்நஷனல் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தலைமறைவான இளைஞன் திருச்சியில் கைதானார்

(கொழும்பு)

போலி நாணயத்தாள்கள் தொடர்பான வழக்கில் தலைமறைவாக இருந்த நிலையில் தேடப்பட்டு வந்த இலங்கை இளைஞர் திருச்சி விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பிரஸ்தாப இளைஞர் போலி நாணயத்தாள்களை வைத்திருந்ததாக தமிழக பொலிஸாரினால் 2001 இல் கைது செய்யப்பட்டார்.

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர் பிணையில் வெளிவந்த பின் தலைமறைவாகி இலங்கைக்கு தப்பி சென்று விட்டார். சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் ரெட்கார்னர் நோட்டீஸ் வழங்கப்பட்டது.

இந்நிலையில் கொழும்பில் இருந்து திருச்சி விமான நிலையத்துக்கு வேறு பெயரில் வந்திருப்பதாக சி.பி.சி.ஐ.டி. போலி நாணயத்தாள்கள் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து திருச்சி சென்ற பொலிஸார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். (அ-2)

# இலங்கையை பாதுகாக்க மத்திய அரசு முனைப்பு

## கலைஞர் கருணாநிதி குற்றச்சாட்டு

இலங்கை அரசாங்கத்தை இந்தியா தொடர்ந்தும் பாதுகாக்க முனைவதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் எம். கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

ராஜீவ்காந்தி, ஜவகர்லால் நேரு போன்ற தலைவர்களை இலங்கை அரசாங்கம் கடந்த காலத்தில் மதித்து செயற்படவில்லை. இலங்கையின் குற்றச்சாட்டுக்கள் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளன.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா தாக்கல் செய்துள்ள பிரேரணைக்கு இந்தியா தொடர்ந்தும் இலங்கையை நண்பனாக பார்க்கிறது.

இதற்கு காரணம் என்னவென்று புரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவது பொதுநலவாய நாடுகளின் கடமை

## அவுஸ்திரேலிய பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகம் மனிதவுரிமைகள் மற்றும் சட்டம் ,ஒழுங்கு போன்றவற்றை நிலைநாட்டுவதே பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலையாய கடமை என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

உலகின் ஏனைய அமைப்புக்கள், நிறுவனங்களை விடவும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொறிமுறைமை மிகவும் தனிப்பட்டது என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான அவுஸ்திரேலிய நிரந்தரப் பிரதிநிதி கெரி குயின்லன் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் 54 நாடுகள் அங்கம் வகித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் இந்த அமைப்பில் அங்கம் வகித்து வருவதாகவும் அதிகளவான நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(அ-2)

# போர் வெற்றி பெருமிதத்தைவிட போர்க்காயங்களை ஆற்றுங்கள்

## கரு எம்.பி அறிவுரை

மக்கள் அடக்குமுறை ஆட்சியை விரும்புவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

போரின் பின்னர் ஜனநாயகம் மற்றும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அரிய சந்தர்ப்பத்தை எட்டி உதைக்க வேண்டாம்.

கிருலப்பனையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,நாட்டில் மூன்று தசாப்தங்களாக போர் நீடித்து வந்தது. போரின் பின்னர் மீண்டும் கடுமையான ஆட்சி மற்றும் நெருக்கடிகள், அடக்குமுறைகளை தொடர்ந்தும் எதிர்நோக்க மக்கள் விரும்புவதில்லை.

போர் வெற்றி குறித்து பெருமிதம் அடைவதனை விடவும் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் இதயங்களில் ஏற்பட்டுள்ள காயங்களை ஆற்றுவது முக்கியமானது. போரின் போது காணாமல் போனவர்களை தேடிக் கொடுக்குமாறு கோரி வவுனியாவிலிருந்து கொழும்பு புறப்பட்டவர்கள் தடுக்கப்பட்டனர். இந்தக் குழுவில் பெரும்பான்மையானவர்கள் பெண்களாவர்.

தங்களது வருத்தத்தை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்த எடுத்த முயற்சியை அரசாங்கம் படையினரைப் பயன்படுத்தி அடக்கு முறைக்கு உட்படுத்தியுள்ளது. எல்லா விடயங்களையும் அரசியல் கோணத்தில் பார்ப்பது பிழையான அணுகுமுறையாகும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்காக வடக்கு மக்கள் வாக்குரிமையை பயன்படுத்தி போதிலும் மாகாணசபைத் தேர்தலுக்காக வாக்களிக்கும் உரிமை இன்னமும் வடக்கு மக்களுக்கு கிடைக்கவில்லை என கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். (அ-2)

# மத்தள விமான நிலையத்தில் நவீன களஞ்சியத் தொகுதி

## 40 மில்லியன் டொலர் செலவில்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்படும் எந்தவொரு விமானங்களுக்கும் எரிபொ ருள் விநியோகிக்கும் வகையில் 2 1/2 இலட்சம் லீற்றர் எரிபொருள் களஞ்சி யப்படுத்தக்கூடிய எண்ணெய் தாங்கி யொன்று அங்கு அமைக்கப்பட்டுள்ளதாக பெற்றோலிய கைத்தொழில் அமைச்சு தெரி வித்தது. அவ் அமைச்சு மேலும் தெரிவிக் கையில்,

எந்தச் சந்தர்ப்பத்திலும் எரிபொருள் விநியோகிக்கும் வகையில் 40 மில்லியன் பொலர் செலவில் 3 மில்லியன் லீற்றர் எரிபொருள் களஞ்சியயப்படுத்தும் எரிபொருள் களஞ்சியத் தொகுதி எதிர்வரும் ஜூலை மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் நாளை மறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளது. இங்கு வரும் விமானங்களுக்கு எரிபொருள் வழங்க ஏற்றவாறு எரிபொருள் களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளதோடு இதனை விஸ்தரிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

உலகிலுள்ள எந்த விமான நிலையத்துடனும் போட்டியிடக் கூடியவாறு சிறந்த விலையில் எரிபொருள் விநியோ கிக்கவுள்ளது.

மத்தள விமான நிலையம் இயங்க ஆரம்பித்ததும் அம்பாந்தோட்டை துறைமுக களஞ்சியத் தொகுதியின் அளவை 23 மில்லியன் லீற்றராக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனூடாக தாமதமின்றி எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க உள்ளது. உலகில் தலைசிறந்த தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி மத்தள விமான நிலைய களஞ்சியத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது . (அ-2)








வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்திய கச்சியப்பர் விழா வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள ஆதி விநாயகர் பாலாம்பிகை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கந்தபுராண வித்தகர் சுழிபுரம் மாதவர் மார்க்கண்டு– சபிதாதேவி தம்பதியினருடன் வவுனியாவின் மூத்த பெரியார் சதாசிவம், வவுனியா நகரசபையின் முன்னாள் நகரபிதா எஸ்.என்.ஜி. நாதன் நிற்பதையும் மாணவிகளின் நாட்டிய நடனத்தினையும் படங்களில் காணலாம். (படங்கள்:–பூந்தோட்டம் ,குருமன்காடு செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்முறை சமர்ப்பிக்கப்படும் தீர்மானமாவது வலுவானதாக இருக்க வேண்டும்

## உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் வலியுறுத்து

(கொழும்பு)

**ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் குறித்து அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள தீர்மானம் வலுவானதாக்கப்பட வேண்டும் என்று இலங்கையின் உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் சில கோரியுள்ளன.**

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள பிரிட்டனின் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் மேம்படுத்தக் கூடியதாக இந்த புதிய தீர்மானம் அமைய வேண்டும் என்று கோரியுள்ளது.

அதுமாத்திரமன்றி இலங்கை மீதான போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மற்றும் இனப்படுகொலை குறித்த குற்றச்சாட்டு ஆகியவை குறித்து விசாரிக்க சர்வதேச விசாரணைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அது கோரியுள்ளது.

இதேவிடயங்களை வலியுறுத்தியுள்ள மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவைகள் என்ற அமைப்பு மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அதன் பாதுகாவலர்கள் இலங்கையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த தடவை ஜெனீவாவில் வந்து இலங்கையில் மனித உரிமைகளுக்காக குரல்கொடுத்தவர்களுக்கு ஒரு அமைச்சரவை உறுப்பினரே அச்சுறுத்தல் விடுத்ததாகவும் இந்தத் தடவையும் அப்படியான நிலைமைகளுக்கு வாய்ப்பு இருப்பதாகவும் அந்த அமைப்பின் இயக்குநரான Phil Lynch கூறியுள்ளார்.

இதற்கிடையே இலங்கையில் உள்ளூரைச் சேர்ந்த அமைப்பு ஒன்றும் அமெரிக்க தீர்மானம் வலுவானதாகக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளது. வடக்கு, கிழக்கில் பணியாற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கடந்த தடவை வந்த அமெரிக்க தீர்மானம் இலங்கையில் மனித உரிமைகள் மேம்படுவதில் உரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றும் கூறியுள்ளது.

கடந்த ஆண்டும் தீர்மானம் கொண்டுவரப்பட்ட பின்னரும் கூட இலங்கையில் செய்தியாளர்கள் உட்பட பலர் தாக்குதலுக்கு உள்ளாதல் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் ஆகியவை தொடர்வதாகவும் அந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. (அ-2)

# உறுப்பு நாடுகளுக்கு நன்மை தரும் வகையில் பொதுநலவாயம் செயற்பட வேண்டும்

## அரசாங்கம் கோரிக்கை

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பு உறுப்பு நாடுகளுக்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் செயற்பட வேண்டுமென இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் தின நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உறுப்பு நாடுகளுக்கு மெய்யான நலன்களை வழங்குவதன் மூலம் உறுப்பு நாடுகளுக்கு இடையிலான கூட்டுறவு வலுப்பெரும் என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹணே தெரிவித்துள்ளார்.

ஆலோசனைகள், அறிவுரைகள் மற்றும் கொள்கைகள் முக்கியமானது என்ற போதிலும் உறுப்பு நாடுகளுக்கு நலன்களை வழங்குவதே மிகவும் அவசியமானது. அதன் மூலம் உறுப்பு நாடுகளை ஒரே குடும்பமாக பிணைக்கக் கூடிய சாத்தியம் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வி.கழகங்களுக்கிடையிலான போட்டியும் பரிசளிப்பும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேல், வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க, 571 ஆவது படையணியின் கேணல் அமரசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஏற்கனவேநடைபெற்றபோட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் அன்றையதினம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இலங்கை தூதரை அழைத்து இந்தியா கண்டிக்க வேண்டும்

## பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம்

இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்தமை தொடர்பாக டில்லியில் உள்ள இலங்கை தூதரை அழைத்து இதுபோன்ற தாக்குதல்களில் ஈடுபடக் கூடாது என்றும் மீனவர்களை கைது செய்யக் கூடாது என்றும் கண்டிக்க வேண்டும்.

இவ்வாறு பிரதமர் மன்மோகனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

மீனவர்கள் கைது தொடர்பாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 53 மீனவர்கள் 9 விசைப்படகுகளில் கடந்த 13 ஆம் திகதி அன்று கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து தலைமன்னாருக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் கொண்டுள்ள வெறுப்புக்கு இச்சம்பவம் மற்றொரு உதாரணமாகும்.

எனவே, டில்லியில் உள்ள இலங்கை தூதரை அழைத்து இதுபோன்றதாக்குதல்களில்ஈடுபடக்கூடாதுஎன்றும் மீனவர்களை கைது செய்யக் கூடாது என்றும் கண்டிக்க வேண்டும்.

இலங்கை கடற்படையினர் பிடித்துச்சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் மீது எந்தவித குற்ற வழக்குகளும் பதிவு செய்யாமல் விடுதலை செய்யும் படி இலங்கைக்கு அறிவுறுத்த வேண்டும். எதிர்காலத்தில் தேவையில்லாமல் கைது செய்வதன் மூலம் ஆத்திர மூட்டும் வன்முறையில் ஈடுபடக் கூடாது என்றும் வலியுறுத்த வேண்டும் என ஜெயலலிதா தனது கடிதத்தில் கூறியுள்ளார். (ச-1)




★கி.மு597-பாபிலோனியர்கள் ஜெருசலேமைக் கைப்பற்றினர்.

★1190- சிலுவைப் படையினர் யோர்க் நகரின் யூதர்களைப் படுகொலை செய்ய ஆரம்பித்தனர். பல யூதர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

★1521- மகலன் பிலிப்பைன்சை அடைந்தான்.

★1926-முதலாவது திரவ எரிபொருளினால் உந்தும் ஏவுகணையை மசாசுசெட்சில் ரொபேர்ட் கொடார்ட் என்பவர் செலுத்தினார்.

★1939-பிராக் அரண்மனையில் இருந்து ஹிட்லர் பெஹேமியா மொராவியாவை ஜேர்மனியின் ஒரு பகுதியாக அறிவித்தார்.

★1942-முதலாவது வி-2 ஏவுகணை ஏவப்பட்டது. (ஏவப்பட்ட உடனேயே வெடித்துச் சிதறியது)

★1945-இரண்டாம் உலகப் போர்: இவோ ஜீமா சண்டை முடிவுக்கு வந்தது.

★1962-மேற்கு பசுபிக் பெருங்கடலில் அமெரிக்க விமானம் 107 பயணிகளுடன் காணாமல் போனது.

★1963-பாலியல் ஆகூங் மலை நெருப்பு கக்கி 11 ஆயிரம் பேர் வரை இறந்தனர்.

★1966-ஜெமினி 8 நாசாவின் 12 ஆவது மனிதரைக் கொண்டு சென்ற விண்கலம் ஏவப்பட்டது.

★1988- ஈராக்கில் குருதிய நகரான ஹலப்ஜாவில் நச்சு வாயுத் தாக்குதலில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

★2006-மனித உரிமைகளுக்கான ஐ.நா. அமைப்பை உருவாக்குவதற்கு ஐ.நாவின் பொதுச் சபை ஆதரவாக வாக்களித்தது.

**பிறப்புக்கள்**

★1751-ஜோர்ஜ் மாடிசன், ஐக்கிய அமெரிக்காவின் 4 ஆவது குடியரசுத் தலைவர் (இ.1836)

★1789- கியோர்க் ஓம், ஜேர்மனிய இயற்பியலாளர் (இ.1854)

★1839-ரெனே சளி-புரூடோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1907)

★1918-பிரெடெரிக் ரெயின்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1998)

★1929-இரா.திருமுருகன், தமிழறிஞர்

★1953-ரிச்சர்ட் ஸ்டால்மன், கட்டற்ற மென்பொருள் இயக்கம், க்னூ திட்டம் போன்றவற்றின் தோற்றுவிப்பாளர்

**இறப்புக்கள்**

★1914-சார்ள்ஸ் கோபட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1843)

★1935-ஜோன் மாக்லியட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1876)

★1940-செல்மா லாகர்லோஃப், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி.1858)

★1945-எம்.ஜே.லெகொக் அடிகளார், அருட்தந்தை (பி.1880)

★1998-டெரெக் பார்ட்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி.1918)

### திருமுருகன்



திருமுருகனார் புதுச்சேரி மாநிலத்தில் கூனிச்சம்பட்டு என்னும் ஊரில் அ.இராசு- இரா. அரங்கநாயகி ஆகியோருக்குப் மகனாக பிறந்தார். இவரது இயற்பெயர் சுப்பிரமணியன் என்பதாகும். தனித் தமிழ் ஆர்வம் காரணமாக தம் பெயரைத் திருமுருகன் என மாற்றிக் கொண்டார்.

இவர் பண்டிதம் (1951), கர்நாடக இசை குழல் மேனிலை (1958), பிரெஞ்சு மொழிப்பட்டயம் (1973), கலைமுதுவர், கல்வியியல் முதுவர், மொழியியல் சான்றிதழ் (1983), முனைவர் (1990) உள்ளிட்ட பல பட்டங்கள், சான்றுகளைப் பெற்றார்.

44 ஆண்டுகள் அரசுப் பணியாற்றி பின்னர் தமிழ் வளர்ச்சி சிறகத்தின் தனி அலுவலர் பணிபுரிந்து புதுச்சேரியில் தமிழ் வளர்ச்சிக்கு வேண்டிய ஆக்கப்பணிகளில் ஈடுபட்டார். தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக்குழு என்னும் அமைப்பின் சிறப்புத் தலைவராகவும் புதுவைத் தமிழன்பர்கள் தமிழ்ப்பணி அறக்கட்டளையின் நிறுவுநராகவும் தெளிதமிழ் என்னும் மாத ஏட்டின் சிறப்பு ஆசிரியராகவும் தமிழ்காவல் என்னும் இணைய இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீர்மானத்தை ஆதரிப்பதா எதிர்ப்பதா?

# மதில்மேல் பூனைபோல் இந்தியா...!

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான நகர்வுகள் தீவிரமடைந்துள்ளன. அடுத்த வாரம் இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் விவாதிக்கப்படவுள்ளது. இந்தத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்படுமா? இல்லையா? இந்தத் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளிக்குமா? இல்லையா? இந்த இரண்டும்தான் இப்போதைய முக்கிய வினாக்களாக உள்ளன. இலங்கைக்கு எதிரான தீர்மானம் தோற்கடிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் ஜெனீவாவில் இல்லை. எப்படியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிடும் என்பதில் சந்தேகம் அரசாங்கத்துக்குக்கூட இருப்பதாகத் தெரியவில்லை. கடந்த ஆண்டு தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது இறுக்கமான கடும் சூழல் காணப்பட்டது.

தீர்மானத்தை வெற்றி பெற வைப்பதற்கும் தோற்கடிப்பதற்கும் அமெரிக்காவும் இலங்கையும் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. அத்தகைய சூழலில் கூட இலங்கை அரசாங்கம் எப்படியும் தோற்றுவிடுவோம் என்றே கருதியிருந்தது. தீர்மானம் தோற்கடிக்கப்படும் வரையில் இதனை அரசாங்கம் வெளியே சொல்லவில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், எதிர்பார்க்கப்பட்ட முடிவுதான் என்று பேராசிரியர் திஸ்ஸ விதாரண போன்ற அமைச்சர்கள் கூறியிருந்தனர். ஆனால், கடந்தமுறைபோல அமைச்சர்களோ அரசாங்கமோ தீர்மானம் தோற்கடிக்கப்படும் என்று அழுத்திக்கூறி நம்பிக்கையூட்டத் தயாராக இல்லை. ஆனால், எப்படியாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிடும் என்பதில் அரசாங்கத்துக்குச் சந்தேகம் இல்லை. காரணம் கடந்த முறை இருந்தளவு ஆதரவு இலங்கைக்கு இம்முறை இல்லை. கடந்தமுறை பெரும் பக்கபலமாக இருந்த சீனா, ரஸ்யா, கியூபா போன்ற நாடுகள் இப்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வாக்களிக்கும் தகைமையைக் கொண்டிருக்கவில்லை.

போர்முடிந்து நான்கு ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் இறுதியான அமைதியை ஏற்படுத்தத் தவறியுள்ளது மட்டுமன்றி நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்திலும் எந்தவொரு நாட்டையும் திருப்திப்படுத்தத் தவறியுள்ளது.

தீர்மானம் நிறைவேற்றப்படுமா இல்லையா என்பது இப்போதைய பிரச்சினையல்ல. இந்தத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்படுமா? இந்தியா இதனை ஆதரிக்குமா என்பனவே முதன்மையான பிரச்சினை. இந்த இரண்டு கேள்விகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ளன. அதாவது அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானம் வாக்கொடுப்புக்கு விடப்படுவதை விரும்பாத சில நாடுகளில் இந்தியாவும் ஜப்பானும் முக்கியமானவை. இவை இரண்டுமே இப்போது மதில்மேல் பூனையாக இருக்க விரும்புகின்றன. தமது சார்பு நிலை வெளிப்பட்டுவிடாமல் இருப்பதற்காக இந்த நாடுகள் தீர்மானம் வாக்கெடுப்புக்கு வருவதைத் தவிர்க்க நினைக்கின்றன. அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடப்படாமலேயே ஏற்றுக் கொள்ளும்படி இலங்கைக்கு இந்தியா ஆலோசனைகளைக் கூறியுள்ளது.

அதாவது, அமெரிக்காவின் தீர்மானத்தை இலங்கை ஏற்றுக் கொள்வதன்மூலம்- அதனுடன் இணங்கிப்போவதன் மூலம் அதனை சாத்தியப்படுத்த முடியும். ஆனால், அவ்வாறு இணங்கிப் போவதானால் இப்போதைய தீர்மான வரைபின்படி நடுநிலையான சர்வதேச விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டிவரும். இந்தியாகூட இந்த வரைபை ஏற்கவில்லை. அதாவது சர்வதேச விசாரணைக்குழு இலங்கைக்குள் வருவதை இந்தியா வரவேற்கவில்லை. எனவேதான், அமெரிக்காவுடன் பேசி இந்த வரைபில் திருத்தங்களைச்செய்து ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளும்படி இந்தியாவை வலியுறுத்தி வருகிறது. இந்தியாவின் அறிவுரைப்படி இலங்கை நடந்து கொள்வதானால் வாக்கெடுப்புக்குக்கோராமலேயே ஒதுங்கி நிற்கவேண்டும். அவ்வாறு செய்தால் தீர்மானத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டதாகிவிடும். இது முழுமையான சரணாகதிக்கு ஒப்பானது.

இலங்கையைப் பொறுத்த வரையில் சர்வதேச நகர்வுகளுக்கு எதிராக நின்று பிடிக்கும் ஒரு தன்மையை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தி வந்துள்ளது. அதாவது, சர்வதேச சக்திகள் எல்லாம் இலங்கை அரசைக் கவிழ்க்கச் சதி செய்கின்றன. அதற்கெல்லாம் பணியப் போவதில்லை என்ற விம்பம் ஒன்றை அரசாங்கம் உருவாக்கி வைத்துள்ளது.

ஜெனீவா தீர்மானத்தை எதிர்க்காமல்- வாக்கெடுப்புக்கு கோராமல் அரசாங்கம் ஒதுங்கிக் கொண்டால் அந்த விம்பம் உடைந்துபோய்விடும். அடுத்த அமெரிக்கத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டால் சர்வதேச விசாரணையை எதிர்கொள்வது மட்டும் சிக்கலில்லை. தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்தியுள்ளதா என்பது குறித்து 24 ஆவது அமர்வில். அதாவது இன்னும் ஆறுமாதங்களில் இடைக்கால உள்ளக அறிக்கையை எதிர்கொள்ள வேண்டும்.

25 ஆவது அமர்வில் அதாவது அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இறுதி அறிக்கை மற்றும் விவாதம் நடத்தப்படுவதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவை இலங்கைக்கு இடிக்கின்ற விடயங்கள். அதாவது இந்தியாவின் சங்கடங்களைப் போக்கிக் கொள்வதற்காகதான் நெருக்கடியில் சிக்கிக்கொள்ள இலங்கை விரும்பியோ விரும்பாமலோ தீர்மானம் நிறைவேற்றப்படும் நிலை உள்ளதால் இந்தியாவின் ஆதரவைக் கருத்தில் கொண்டு வாக்கெடுப்பைக் கோராமலும் விடமுடியும்.

இலங்கை அரசாங்கம் இந்த தீர்மான விடயத்தில் பலத்த குழப்பத்தை எதிர்கொண்டுள்ளது. அதனால் தான் தெளிவான முடிவொன்றை எடுக்க முடியாதுள்ளது. இனி இந்தியா என்ன செய்யப் போகிறது என்ற கேள்விக்கு விடை தேடலாம். இலங்கை வாக்கெடுப்பைக் கோராது போனால், தப்பித்தோம் என்று இந்தியா இருந்து விடும். ஆனால், இந்தியாவின் பேச்சை மீறி தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பை நடத்த இலங்கை கோரினால் இந்தியாவின் பாடுதான் திண்டாட்டமாகிவிடும்.

கடந்த வாரம் இருந்த சூழல் இந்திய நிலைப்பாடு இலங்கைக்கு சார்பானதாக இருக்கவில்லை. அதாவது தமிழ்நாட்டின் அழுத்தங்கள் காரணமாக தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக்கூடிய வாய்ப்புகளே அதிகமிருப்பதாக கருத வைத்தன. ஆனால், இப்போதைய நிலைமை அவ்வாறு இல்லை என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள உண்மை கண்டறியும் பொறிமுறையை இந்தியா ஏற்கத் தயாரில்லை. இந்த உண்மை கண்டறியும் பொறிமுறை என்பது ஒரு சர்வதேச விசாரணைப் பொறிமுறைதான். அவ்வாறு ஒரு குழு அமைக்கப்பட்டு இலங்கையில் நடந்த சம்பவங்கள் குறித்து விசாரிக்கப்படுவதை இந்தியா விரும்பவில்லை. அது இந்தியாவையும் பொறிக்குள் தள்ளிவிடும் என்று கருதுவதால் இறைமை பற்றி அதிகமாகவே பேசுகிறது.

எந்த விசாரணையானாலும் அதை உள்நாட்டுக்குள் தான் மேற்கொள்ள வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. முன்னதாக நவநீதம்பிள்ளையின் அறிக்கையை இணைத்து அதை வரவேற்பது என்ற போர்வையில் உண்மை கண்டறியும் பொறிமுறையை உருவாக்கும் வரைபை அமெரிக்கா வெளியிடவில்லை. இரண்டாவது வரைபில்தான் அந்த அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது. இது சேர்க்கப்பட்டதும் இந்தியா எச்சரிக்கையாகி விட்டது. இதனால்தான் இந்திய நாடாளுமன்றத்தில் தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் மட்டுமன்றி ஏனைய அரசியல் கட்சிகளும் கடுமையான குரல் கொடுத்த போதிலும் பிடிகொடுக்காமல் நழுவியது மன்மோகன்சிங் அரசு.

பிரதமர் மன்மோகன் சிங் ஆகட்டும் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகட்டும் கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்காமல் பதிலளிக்கின்றனர். சல்மான் குர்ஷித் ஒரு கட்டத்தில் பிறநாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடுவதில்லை என்றுகூடக் கூறினார். இப்போதைய நிலையில் இதே தீர்மான வரைபு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் இந்தியா அதனை ஆதரிக்காது என்றே கருத வேண்டியுள்ளது. அவ்வாறு ஆதரிப்பது என்ற முடிவை எடுப்பதானால்கூட வேறு வழியற்றதொரு நிலையில்தான் அந்த முடிவை எடுக்கும்.


உள்நாட்டு நெருக்கடிகள் காரணமாக தீர்மானத்தை எதிர்க்கின்ற முடிவை இந்தியாவினால் எடுக்க முடியாது. அது மன்மோகன்சிங் அரசாங்கத்தைப் பொறுத்தவரை தற்கொலைக்கு ஒப்பானது. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 ஆசனங்களைக் கொண்ட தமிழ்நாடு மற்றும் புதுவையை ஒட்டுமொத்தமாகவே கைகழுவி விடுவதற்கு அது சமனாகும். எனவே, தீர்மானத்தை எதிர்த்து இந்தியா வாக்களிக்க முடியாது. நடுநிலை வகிப்பது ஒன்றே அதன் தெரிவாக இருக்கும்.



ஆனால் தீர்மானத்தில் திருத்தம் செய்வதற்கு இந்தியா இறுதிவரை முயற்சிகளை மட்டும் மேற்கொள்ளும். அது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்று கூற முடியாது. ஜெனீவா தீர்மானம் விவாதத்துக்கு வந்து வாக்கெடுப்புக்கு விடப்படும் வரை இலங்கையால் மட்டுமன்றி மன்மோகன்சிங் தலைமையிலான இந்திய அரசாங்கத்தினாலும்கூட நிம்மதியாக இருக்க முடியாது.

-கே. சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறுவர் அரங்கம்

399

## விருந்தாளிகள் தொல்லை



வள்ளுவரின் விருந்தோம்பலுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த சிவாவின் வீட்டில் எப்போதும் விருந்தாளிகள் கூட்டம்தான். ஒருநாள், இரண்டுநாள் என்றால் பரவாயில்லை. பல ஆண்டுகளாக இப்படி விருந்தாளிகளை உபசரித்தால் என்ன ஆகும்? சிவாவின் ஆஸ்தி வெகு விரைவாகக் கரைய ஆரம்பித்தது.

ஒரு நிலைமைக்குமேல் தாக்குப்பிடிக்க முடியாமல் தன் நண்பன் சம்பத்தைத் தேடிச் சென்ற சிவா அவனிடம் விருந்தாளிகளின் கூட்டத்தைக் குறைக்க யோசனை கேட்டான்.

சிவாவின் பிரச்சினையைக் கூர்ந்து கேட்ட சம்பத் பின்பு குறைந்த உனது உறவினர்களுக்கு வசதியுள்ள சிலரிடம் இருந்து உன் மூலமாகக் கடன் வாங்கிக்கொடு என்றான் சம்பத்.

நல்ல யோசனை சொன்னாய்! கடன் வாங்கியவர்கள் அதைத் திரும்பித் தராவிட்டால் அப்புறம் நான் அல்லவா மாட்டிக் கொள்வேன் என்றான் சிவா.

நான் சொன்னபடி செய். ஒரு மாதங்கழித்து என்னைப் பார் என்றான் சம்பத்.

ஒருமாதம் கழித்து சம்பத்தை மீண்டும் சந்தித்தான் சிவா. நீ சொன்னபடியே செய்தேன் சம்பத்! ஒரு நல்ல விடயம் தெரியுமா? கடன் வாங்கிக் கொண்ட சொந்தக்காரர்கள் இப்போது என் வீட்டுப்பக்கம் தலையைக் காட்டுவதில்லை. ஆனால் கடன் கொடுத்த உறவினர்கள் இன்னமும் வந்து கொண்டேயிருக்கிறார்களே! என்றான்.

பரவாயில்லை! மறுபடியும் அவர்கள் உன் வீட்டுக்கு வரும்போது அவர்களிடம் நீங்கள் செய்த உதவிக்கு நன்றி! நமது உறவினர்கள் இன்னும் சிலருக்கும் பணம் தேவைப்படுகிறது. அவர்களும் நமது சொந்தக்காரர்கள்தானே! சிலருக்கு மட்டும் கொடுத்து சிலருக்குக் கொடுக்காமல் போனால் எப்படி? அதனால் அடுத்த முறை நீங்கள் இங்கு வரும் போது அவர்களையும் வரச் சொல்கிறேன் என்று சொல் என்றான்.

இரண்டு வாரத்திற்கு பின்பு சம்பத்தை தேடிவந்த சிவாவின் முகத்தில் மிக மகிழ்ச்சியும் நடையில் துள்ளலும் காணப்பட்டன.

டேய் சம்பத் பிரமாதம் உன் யோசனை! இப்போது கடன் வாங்கியவர்களும் என் வீட்டிற்கு வருவதில்லை. கடன் கொடுத்தவர்களும் வருவதில்லை.

ஆனால் எப்படி இந்த அதிசயம் நிகழ்ந்தது என்று புரியவில்லை என்றான் சிவா.

அதற்கு சம்பத் இதில் அதிசயம் என்ன இருக்கிறது? உன் மூலமாக கடன் வாங்கியவர்கள் நிச்சயமாக மறுமுறை உன் வீட்டிற்கு வரமாட்டார்கள். ஏனென்றால் வந்தால் அவர்களை நீ கடனைத் திருப்பி தரச்சொல்லி நச்சரிப்பாய். கடன் கொடுத்தவர்களும் தயங்குவார்கள்.

ஏற்கனவே கொடுத்த கடன் வசூலாகவில்லை. இவனை நம்பி மேலும் கடன் கொடுக்க வேண்டாம் என்று எண்ணி வரமாட்டார்கள். ஆக, நீ தப்பித்தாய்! என்றான்.



அடடா! எவ்வளவு கஷ்டமான பிரச்சினையை எவ்வளவு எளிதாக தீர்த்து வந்தாய்! மிகவும் நன்றியப்பா! என்று சம்பத்தைப் பாராட்டினான் சிவா.

## வாயில்லாப் பிராணியின் சாட்சி

### அம்புலிமாமா கதைகள்


ஒருகிராமத்தில் பீமன் என்ற விவசாயி வசித்து வந்தான். தன்னுடைய நான்கு ஏக்கர் நிலத்தில் பறங்கிக்காய் பயிர்செய்து விளையும் காய்களை பக்கத்தில் உள்ள கோலார் நகரத்தில் விற்று வந்தான்.

ஒருமுறை தனது தோட்டத்தை காவல் காக்கும் கந்தனிடம் பொறுப்பை விட்டு விட்டு ஊருக்குச் சென்று விட்டான்.

நான்கு, ஐந்து நாட்களுக்கு ஒருமுறை கந்தன் தன் மகனின் மாட்டுவண்டியில் பத்து விளைந்த பறங்கிக்காய்களை எடுத்துச்சென்று கோலாரில் விற்று வந்தான்.

ஒருமாதம் கழித்து திரும்பிய பீமன் தனது நிலத்தை பார்வையிட்டான். தான் இல்லாத போது கந்தன் பறங்கிக்காய்களை திருடியுள்ளான் எனத் தோன்றியதும் அடுத்த நாள் பீமன் தன் நிலத்திலிருந்து 25 பறங்கிக்காய்களை பறித்து வண்டியில் ஏற்றி கந்தனை அனுப்பினான்.

நகரத்திற்குச் சென்று கடை வீதியில் நுழைந்ததுமே ஒரு கடையின் முன்னே மாடு தானாகவே நின்று விட்டது. கந்தனைக் கண்ட கடைக்காரன் இதற்கு முன் பத்துக் காய்களை மட்டுமே கொண்டு வருவாய். இன்று இவ்வளவு காய்களை எப்படி கொண்டு வந்தாய்? என்று கேட்டான். கந்தன் வசமாக மாட்டிக் கொண்டான். உடனே பீமன் கந்தனை நோக்கி மாடு போன்ற பிராணி எங்கே வழக்கமாக வந்து நிற்குமோ அங்கு தானாகவே வந்து நின்று விடும். நீ ஒரு திருடன் என்பதற்கு இந்த வாயில்லா பிராணி சாட்சி உன்னை இன்றிலிருந்து வேலையை விட்டு நீக்குகிறேன் என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நிகழ்வின் நிழல்கள்



ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் சாவகச்சேரி நகர சபையின் உபதவிசாளருமான கு.சதாசிவமூர்த்தி அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதைப் படத்தில் காணலாம். (படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)









இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா மாவட்ட கிளையின் அனுசரணையுடன் வவுனியா பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியினூடாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்களால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போது....


திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தில் சிறார்களுக்கான கணனிப் பயிற்சி களச் செயற்பாடுகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஜப்பான் நாட்டில் இருந்து வருகை தந்த கணனிப் பொறியியலாளர் ஜெடபா டெக் கோவாலினால் சிறார்களுக்கு கணனி அறிமுகம் செய்து வைக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.





நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாயி மந்திர் ஆலயத்தில் அண்மையில் சிவராத்திரி நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது சுவாமி எழுந்தருளி வீதி உலா வரும் காட்சியைப் படத்தில் காணலாம்.






கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் வடக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் வெற்றி பெற்ற இல்லத்திற்கு வெற்றிக் கேடயம் ஒன்றினை வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.







விஞ்ஞான கற்கையை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட கண்டல் இறுவெட்டு வெளியீட்டு விழா அண்மையில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ப.கணேசலிங்கம் உரையாற்றுவதையும் தயாரிப்பாளர் அ.ஜெயக்கீசனிடமிருந்து வவுனியா தெற்கு வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் இந்திரலிங்கம் இறுவெட்டை பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் திருமதி

**பொன்ராசா இரத்தினாதேவி**



காலத்தின் ஒளி விளக்காய்
எம்மோடு இருந்து இன்று
உயிரோடு உயிராய் கலந்துவிட்ட தெய்வமே
மண்ணைவிட்டு விண் சென்று
ஓராண்டு ஆனபோதும்
மண்ணில் நாம் உள்ளவரை
மறப்போமா உங்கள் நினைவை
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனைப் பிரார்த்திக்கும்

உம் பிரிவால் துயருறும்,
கணவர் செ.பொன்ராசா
செல்வவாசம்
வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை.
தொ.பே: 021 3008286

(சி/2137)

# உதயம் மைதானத்தை புனரமைத்து தாருங்கள்

## விளையாட்டு ஆர்வலர்கள் கோரிக்கை

கள்ளப்பாடு தெற்கில் உள்ள உதயம் விளையாட்டுக் கழகத்தின் பொதுவிளையாட்டு மைதானம் நீண்ட காலமாக புனரமைக்கப்படா மையால் விளையாட்டுக்கள் ஸ்தம்பிதம் அடைந் துள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 1990 ஆம் ஆண்டிற்கு பின் இம் மைதானம் புனமைக்கப்படாதுள்ளதுடன் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 3 வருடங்கள் கடந்த நிலையிலும் புனரமைக்கப் படாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண் டியுள்ளது. கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, உண்ணா ப்புலவு ஆகிய கிராமங்களை சேர்ந்த இளை யோர் இம் மைதானத்தையே பயன் படுத்தி வருகின்றனர்.

அத்துடன் கள்ளப்பாடு அ.த.க. பாடசா லைக்கு விளை யாட்டு மைதானம் இன்மை யால் இம்மைதானத்தையே பயன்படுத்து கின்றனர். மேலும் முன்பள்ளிகளின் பெருவி ளையாட்டுக்களும் இம்மைதானத்திலேயே இடம் பெறுகின் றது. ஒரு நாளில் 100 இற்கு மேற்பட்ட வீர, வீராங்க னைகள் விளையாடும் இவ்விளையாட்டு மைதானத்தில் விளை யாட்டு உப கரணங்கள் மற்றும் மின்சார வசதிகள் இன் மையால் அவதியுறுகின்றனர்.

மேலும் சுற்றுவேலி இன்மையால் கால் நடைகள் மைதானத்தை அசுத்தம் செய்கின் றன. மழைகாலங்க ளில் வெள்ளம் நிரம்பி சேறும் சகதியுமாக காணப்படுகி ன்றது. எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து மைதானத்தை புனரமைக்க முன்வர வேண்டுமென விளையாட்டு ஆர்வ லர்கள் வேண் டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

யா/வதிரி திரு இருதயகல்லூரியின் நூற்றாண்டு விழா இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் கல்லூரி அதிபர் இ.இராகவன் தலையில் நடைபெற வுள்ளது.இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியின் பிரதம விருந்தினராக கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் வ.கண பதிப்பிள்ளை ,சிறப்பு விருந்தினராக கல் லூரியின் பழைய மாணவரும் ஓய்வு நிலை உபஅதிபரு மான சீ.யேசுநாய கம் ஆகியோர் கல ந்து கொள்ளவுள்ள னர். கௌரவிருந்தி னர்களாக கரவெட்டி பங்குதந்தை அரு ட்பணி எமில்போல் இராஜேஸ்வரன் அடிகளார் ,லூர்து மடத்தலைவி அருட் சகோதரி வில்மா ஏ.சி. ஆகியோர்கலந்துகொள் கின்றனர். (அ-5)


# மக்கள் வங்கி

## அறிவித்தல்

### நகை அடகு ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எதிர்வரும் 16.03.2013, 17.03.2013 திகதிகளில் நடைபெற இருந்த நகை அடகு ஏலவிற்பனை எதிர்வரும் 21.03.2013 (வியாழக்கிழமை) மற்றும் 22.03.2013 (வெள்ளிக்கிழமை) ஆகிய திகதிகளிற்கு பிற்போடப்பட்டுள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

2013.03.15

(சி/2699)


# 4 ஆம் அண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்வி இராகினி கதிர்காமத்தம்பி**

(ஆசிரியை, வவு/திருஞானசம்பந்தர் வித்தியாலயம்)

**மண்ணுலகில்: 23.05.1978**
**விண்ணுலகில்: 31.03.2009**

திதி: பூர்வபக்க பஞ்சமி 16.03.2013

நவயுகத்தின் நாயகியாய்
மிளிர்ந்த எங்கள் அன்புச் செல்வியே
மகளே! இராகினி!!
உந்தன் இனிய குரல் கேட்டு
ஆண்டு நான்கு ஆனதம்மா!
எங்கள் நெஞ்சமதில் வரைந்துவிட்ட
உன் அழகிய உருவமதை எங்கள் இறுதி மூச்சு உள்ளவரை
தொழுது நின்று காத்திடுவோம்

இவ்வண்ணம்
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
நாகப்பா வளவு, கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

(சி/2696)

# மரண அறிவித்தல்



**திருமதி இலட்சுமிப்பிள்ளை பரமானந்தம்**

(இளைப்பாறிய ஆசிரியை, வட்டு / இந்துக்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி)

திருமதி இலட்சுமிப்பிள்ளை பரமானந்தம் அவர்கள் (இளைப்பாறிய ஆசிரியை, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி , யாழ். மத்திய கல்லூரி) 14.03.2013 வியாழக்கிழமையன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் விசாலாட்சி ஆகியோரின் அருமை மகளும், சின்னத்தம்பி பரமானந்தம் அவர்களின் துணைவியாரும், நாகேசுவரி சிவப்பிரகாசம் அவர்களின் சகோதரியும், சுலோசனா, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கந்தவேள், வசந்தா ஆகியோரின் அருமை மாமியாரும், பகீரதன், பார்த்தீபன், இந்து, விஜே ஆகியோரின் பேத்தியாரும், சத்தியா, கோதை, பிரணவன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : பரமானந்தம், சுலோசனா, பிரபா**
Tel: 416-269-8348 (Canada)

**பார்வை: ஞாயிற்றுக்கிழமை, 17-03-2013, பிற்பகல் 5.00- 9.00**
**கிரியை: திங்கட்கிழமை 18-03-2013, காலை 8.00- 10.00**
(Highland Funeral Home, 3280 Sheppard Ave. East, Scarborough MIT 3K3, ON CANADA)

**தகனம்: திங்கட்கிழமை 18-03-2013 காலை 11.00**
Eligin Mills Road Cemetery, (1591 ElGin Mills Road East, Richmond Hill, ON L4S IM9)

20/3, சுவாமியார் ஒழுங்கை,
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

தகவல்:
ச.பிரணவன்– 0773604486
(பெறா மகன்)

(சி/2168)




# QP மூலம்

## சவுதி அரேபியாவுக்கு பலதியா சுத்தீகரிப்பாளர்கள்

## உடனடி வேலைவாய்ப்பு

### இலங்கையிலிருந்து பயணிக்க பணம்தேவையில்லை

**சம்பளம் - SR 650/-** (1 SR = Rs.35/-)

பயணத்திற்கான செலவு மாத சம்பளத்திலிருந்து அரசாங்க அனுமதிக்கட்டணம் ரூபா. 38,500/- அறவிடப்படும்.

**Terms & Conditions:**

- தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் இலவசம்
- ஒப்பந்த காலம் 3 வருடம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்தில் 48 மணித்தியால வேலை
- 2 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்து நாடுதிரும்பும்போது விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை சவுதி அரேபிய சட்டத்திற்கு உட்பட்டது.

பாஸ்போட், 8 பாஸ்போட் அளவு போட்டோக்களுடன் உடன் நேரே வரவும்.

தொடர்புகளுக்கு: 0112 681515 / 0112684433

**QP Employment (pvt) Ltd,**
No.06, Campbell Terrace, Punchi Borella,Colombo -10.
Tel: 0112 681212, 2684433, 2681515. e-mail: admin@qpjobsonline.con

AL/1316 Advt:/04/13

(சி/2693)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வங்கி கடனை மீள செலுத்த காலநீடிப்பை வழங்குங்கள்

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் மன்றாட்டம்

(மல்லாவி)

நெற்பயிர் செய்கைக்காக வங்கியால் பெற்ற விவசாயிகள் கடனை செலுத்துவதற்காக மீற்றர் வட்டிக்கு கடன் வாங்கி செலுத்த வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகங்கள் உட்பட வன்னிப் பெருநிலப்பரப்பில் அநேகமான இடங்களில் இந்நிலை காணப்படுவதால் விவசாயிகள் பலருடைய குடும்பங்கள் தற்கொலை நிலைக்கு செல்கின்ற அவல நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவது,

கடந்த ஆண்டுகால போக செய்கைக்காக பல ஆயிரம் ரூபா பணத்தை அரச மற்றும் தனியார் வங்கிகளில் பெற்று நெல் விதைப்பை மேற்கொண்டனர். அவர்கள் நெல் விதைப்பு செய்த காலம் தொடக்கம் மழை வெள்ளம் ஏற்பட்டு பலர் பாதிப்படைந்தனர்.

நெல் பயிர் வளரும் போது கோரைப்புற்களின் தாக்கம் ஏற்பட்டது. இதைக் கட்டுப்படுத்த பல ஆயிரம் ரூபா செலவு செய்து களை நாசினிகளை விசிறினர்.

ஆயினும் அம்மருந்து வீரியம் இன்மை காரணமாக பயனளிக்காது போன நிலையில் தற்போது அறுவடைக்கு த்யாரான நிலையிலும் தொடர்ந்து இரண்டு தடவைகள் மழை, வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக அநேகம் பேருடைய நெல்மணிகள் முளைவிட்டு சேதமடைந்து போயுள்ளன. இதனால் அறுவடை செய்யாது வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் பல ஆயிரம் ஏக்கர் நெல் அழிவடைந்துள்ளது.

இந்நிலையிலேயே வங்கிகளில் பெற்ற கடனை மீளச் செலுத்தும்படி வங்கிகள் வற்புறுத்துவதால் பலர் மீற்றர் வட்டிக்கு பணம் பெற்று வழங்கியுள்ளனர். இதனால் பெற்ற கடன்களை சீர்செய்ய முடியாது விவசாயிகள் தவிப்பதோடு தற்கொலைக்கும் முயற்சிக்கின்றனர்.

எனவே மக்கள் அமைப்புக்கள் கமநல சேவை நிலையங்கள் இவ் விடயத்தை முல்லை. மாவட்ட அரச அதிபருக்கும் மற்றும் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கும் கொண்டு வந்து வங்கிக்கடன்களை செலுத்துவதற்கு வட்டி இல்லா கால நீடிப்பையோ அல்லது நெற்செய்கை அழிவடைந்தமைக்கான இழப்பீட்டையோ பெற்றுத்தர உடன் செயற்பட வேண்டும் எனவும் இல்லையேல் பல குடும்பங்களின் வாழ்வு கேள்விக்குறியாகவே அமையும் எனவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர். (அ-3-15)

# நுகர்வோரின் நன்மை கருதி விசேட தொலைபேசி இலக்கம்


(கொழும்பு)

பாவனையாளர்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளை முறையிடுவதற்கும் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் சரியான விலைகளை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்குமென விசேட முறைப்பாட்டு தொலைபேசி இலக்கமொன்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள விசேட நிகழ்வொன்றின் போது மேற்படி தொலைபேசி இலக்கம் வெளியிடப்படவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை செய்வதற்கு விசேட உரிம பீடமொன்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை எவ்வேளையிலும் இந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வழங்கினால் சம்பந்தப்பட்ட வர்த்தக நிறுவனங்களுக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுக்கும் என அதிகார சபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (அ-2)




வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுயதொழில் செய்கின்றவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன் உலர்த்தும் பெட்டிகள் அண்மையில் வழங்கப்பட்டது. இதனை பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பிரதேச செயலர் அ.சோதிநாதன் உள்ளிட்டோர் வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்:- பண்டத்தரிப்பு செய்தியாளர்)

# சங்குப்பிட்டி பாலத்தில் வைத்து த.பே.நடத்துநர் மீது தாக்குதல்

## அச்சத்தில் உறைந்த பயணிகள்

(கரவெட்டி)

மன்னாரில் இருந்து யாழ்.நோக்கி வந்த தனியார் பேருந்து நடத்துநர் மீது சங்குப்பிட்டி பாலத்தில் வைத்து இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பி.ப.3.30 மணியளவில் சங்குப்பிட்டி பாலத்தடியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது, மன்னாரில் இருந்து பி.ப. 1.30 மணியளவில் பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து சங்குப்பிட்டி பாலத்தடியில் இயந்திரத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக மேற்குறித்த பகுதியில் நின்றுள்ளது.

இதனால் பயணிகளின் உதவியுடன் பேருந்தை தள்ளி பாலத்தின் மேல் ஏற்றியுள்ளனர்.

இந்நிலையில் அவ்விடத்தில் நின்ற இராணுவத்தினர் நடத்துநரை அவ்விடத்தை விட்டு பேருந்தை எடுக்குமாறு வலியுறுத்தி உள்ளனர்.

பயணிகளை ஏற்றிக்கொண்டுதாம் செல்வதாக இராணுவத்தினரிடம் நடத்துநர் தெரிவித்துள்ளார். இருவருக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தினால் அவ்விடத்தில் நின்ற இராணுவத்தினர் ஒருவர் நடத்துநர் மீது சரமாரியாக தாக்கியுள்ளார்.

அப்பேருந்தில் பயணித்த பயணிகள் பெரும் அச்சம் அடைந்ததுடன் நடத்துநரை தாக்க வேண்டாம் எனவும் இராணுவத்தினரிடம் கேட்டுக் கொண்டனர்.

சிறிதுநேரத்தின் பின்னர் அவ் இராணுவத்தினரை அழைத்து வந்து பயணிகளை அச்சுறுத்தும் வகையிலும் நடத்துநரை தாக்கும் வகையில் சிங்களமொழியில் வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டதாகவும் அப்பேருந்தில் பயணித்த பயணிகள் தெரிவித்தனர். (அ-3-24)

# மின்கட்டணம் அதிகரித்தாலும் மானியங்கள் வழங்கப்படுமாம்

## இலங்கை மின்சார சபை தெரிவிப்பு

(கொழும்பு)

மின்கட்டணங்கள் அடுத்த மாதம் முதல் அதிகரிக்கப்படுகிற போதும் பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் நிறுத்தப்படமாட்டதென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

ஒரு அலகு மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக செலவாகும் அதே தொகை பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படுமானால் மின் கட்டணம் பெருமளவு உயரும் என்றும் குறிப்பிட்ட மின்சார சபை ஒரு அலகு மின்சாரம் உற்பத்தி செய்ய சராசரியாக 22 ரூபா 85 சதம் செலவிடப்படுகின்றது. ஆனாலும் 16 ரூபா 20 சதத்திற்கே விநியோகிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது.

மின் பாவனையாளர்களுக்கு 40.1 பில்லியன் ரூபா மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மின் கட்டண உயர்வுடன் மானியம் வழங்கும் தொகை குறைக்கப்பட்டுள்ள போதும் அது நிறுத்தப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்படுகின்றது. மின் கட்டண உயர்வுக்கு முன் மானியம் வழங்க 59.5 பில்லியன் ரூபா செலவிட திட்டமிடப்பட்டிருந்தது.

நாட்டின் துரித பொருளாதார வள[illegible]யுடன் கைத்தொழிற்றுறைக்கு வழங்கப்படும் மானியம் 23.1 பில்லியன் ரூபாவிலிருந்து 26 பில்லியன் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்தது.

மதஸ்தலங்களுக்கு வழங்கும் மானியமும் ஒரு பில்லியனில் இருந்து 1.2 பில்லியனாக அதிகரிக்க மின்சார சபை உத்தேசித்துள்ளது. தற்பொழுது காணப்படும் மின் கட்டணப்படி ஹோட்டல் துறைக்கு ஒரு பில்லியன் மானியம் வழங்க முன்னர் திட்டமிடப்பட்ட போதும் கட்டண உயர்வுடன் இது 0.92 பில்லியனாக குறைக்கப்படவுள்ளது.

வீட்டு மின் பாவனையாளர்களுக்காக கட்டண உயர்வின் பின் 12 பில்லியன் மானியம் வழங்க மின்சார சபை திட்டமிட்டுள்ளதாக தெரியவருகின்றது. (அ-2)

# தமிழக மாணவர்களே உங்கள் உணர்வு தேனாய் இனிக்கிறது

## *சிறிதரன் எம்.பி. அறிக்கை*

(கிளிநொச்சி)

ஈழத்தமிழினத்தின் விடிவிற்காய் தமிழகக் கல்லூரி மாணவர்களின் பாசம் மிகுந்த போர்க்குரல் எம் செவிகளில் தேனாய் இனிக்கிறது.

இவ்வளவு இழப்புக்களின் பின்பும் நாம் தனித்து விடப்படவில்லை என்ற தெம்பை தமிழக மாணவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு,

ஒரு சமூகத்தினதும் நாகரிகத்தினதும் பெருமை அது எவ்வளவு தூரம் நீதியைப் போற்றுகிறது. நீதிக்காய் போராடுகிறது என்பதிலேயே தங்கியுள்ளது. ஒரு சமூகத்தின் மனச்சாட்சிதான் அதன் பண்பாட்டின் அளவை தீர்மானிக்கின்றது.

இந்த வகையில் தமிழக மாணவர்கள் தமிழகத்தினதும் இந்தியாவினதும் மனித குலத்தினதும் மனச்சாட்சியால் எழுந்து நிற்கின்றனர். அவர்கள் கொல்லப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் குரலாய் மட்டுமன்றி நீதிதேவனின் பிரதிநிதிகளாயும் வீரியத்துடன் எழுந்து நிற்கின்றனர்.

இது ஈழத்தமிழர்களுக்காய் நீதிகோரும் விடயம் மட்டுமல்ல அவ்வாறு நீதிகோரியதன் பெயரால் தமிழக மக்களதும் இந்திய மக்களதும் நற்பெயரை வரலாற்றில் பதிக்கப் போகின்றார்கள். நீதிக்காய் போராடுபவர்களே வரலாற்றை படைக்கிறார்கள். அவர்களே தாம் சார்ந்த மக்களுக்கு கௌரவத்தையும் தேடிக் கொடுக்கிறார்கள்.

இதனால் தமிழக மாணவர்களின் போராட்டம் தமிழக மக்களுக்கும் தொன்மை மிகுந்த தமிழ் நாகரிகத்துக்கும் ஒரு கௌரவத்தை தேடிக்கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. எங்கள் குரல்வளைகள் நசுக்கப்பட்ட நேரத்தில் எங்களை நாங்களே கண்ணாடியில் பார்க்கும் உணர்வைத் தருகிறது. எங்கள் உள்ளுணர்வை [illegible] அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# புராதன நாணய குற்றிகளை கடத்த முயன்றவர் கைது

(கொழும்பு)

பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக மதிக்கப்படும் 249 புராதன நாணயக் குற்றிகளை இந்தியாவுக்கு சட்டவிரோதமாக எடுத்துச் செல்ல முயன்ற இலங்கை பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை 5.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக சென்னை செல்ல முற்பட்டபோதே குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதாக சுங்கத் திணைக்களப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட நாணயக்குற்றிகள் 12 அல்லது 13 ஆம் நூற்றாண்டுகளை சேர்ந்தவை என சந்தேகிப்பதாக கூறிய அவர் அதனை உறுதிப்படுத்துவதற்காக 249 நாணயங்களும் தொல்பொருள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சந்தேகநபர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

உதவி சுங்க அத்தியட்சகர் மதுசங்க தலைமையிலான குழு இது குறித்து விசாரணை நடத்துகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியை ஏமாற்றலாம். ஆனால் மனச் சாட்சியை ஏமாற்ற முடியாது.
~ ஸ்டாஸ்லாஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# திருமறைக் கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் மாபெரும் அரங்க ஆற்றுகை நிகழ்வான **காவிய நாயகன்** திருப்பாடுகளின் நாடகம் எதிர்வரும் 21 ஆம் வியாழக்கிழமை முதல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ள காவிய நாயகன் நாடக ஆற்றுகை வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளைப் போலவே பிரமாண் டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, ஒலி-ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னனியிலும் இருநூறுக்கும் அதிகமான கலைஞர்கள் இவ்வாற்றுகையில் பங்கேற்கின்றார்கள்.

பல்லாயிரக்கணக்கான பார்வையாளர் களை ஈர்க்கின்ற படைப்பாக அமைன்ற இவற்றுக்கான ஏற்பாடுகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன. திருமறைக்கலாமன்ற இயக்குநர் நி.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய காவிய நாயகன் ஆற்றுகைக்கான நெறியாள்கையை திரு மறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் மேற்கொண் டுள்ளார்.

மனிதம் என்ற தேடலுக்கு பதில் தரும் வகையில் இறைமகன் இயேசுவின் வாழ்க்கை அமைந்துள்ளது. அவர் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், கட்டத்தையும், சவாலையும் எவ்வாறு அணுகி மனிதத்தின் உச்சமாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கினர் என்பதை சுஹ முனைகிறது காவிய நாயகன் ஆற்றுகை.

நி.மரியசேவியர் அடிகள் தமிழ் மரபுக்குரியதான வகையில் முதன்முதலாக திருப் பாடுகளின் நாடகத்துக்குரிய எழுத்துருக்களை எழுதி 1963 ஆம் ஆண்டிலிருந்து இப் படைப்புக்களை அரங் கேற்றி வருகின்றார். அவர் இப்பணியை ஆரம்பித்து இவ்வாண் டுடன் 50 ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## திருத்தப்படும் பாலங்களும் உயிர் பறிக்கும் விபத்துக்களும்

பல ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் நடந்த வழக்கு இது. பாலம் ஒன்றை திருத்தி அமைக்கும்பொருட்டு வீதியின் ஒரு புறத்தில் பாலம் உடைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான வேலைகள் நடப்பதாக இருந்தால் பாதசாரிகளுக்கு அதனைத் தெரியப்படுத்தும் பொருட்டு உரிய சமிக்ஞைகள் செய்யப்பட வேண்டும். அதில் இரவு வேளைகளில் திருத்தப்படும் இடத்தில் வெளிச்சக்கூடுகள் பொருத்தப்படுவதும் அவசியம்.

இவ்வாறான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டிருந்தபோதிலும் இரண்டு கண்களும் தெரியாத ஒருவர் இரவு வேளை நடந்து செல்லும் போது, அந்தப் பாலத்திற்குள் விழுந்துவிட்டார்.

விழுந்தவரின் கால்கள் முறிந்து விட்டன. தனக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடு கோரி அமெரிக்காவில் உள்ள உள்ளூர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

வழக்கைவிசாரித்த அந்த உள்ளூர் நீதிமன்றம், பாலம் திருத்தும் போது கடைப்பிடிக்க வேண்டிய அத்தனை நடைமுறைகளையும் பாலம் திருத்தும் நிறுவனம் செய்துள்ளது. இரவு வேளையில், வெளிச்சக்கூடும் பொருத்தப்பட்டுள்ளது.

எனவே கண் தெரியாதவர் பாலத்திற்குள் விழுந்து தனது காலை முறித்துக் கொண்டமைக்கு நட்டஈடு வழங்க முடியாது என்று உள்ளூர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

தீர்ப்பில் திருப்தி அடையாத கண் தெரியாதவர், மேன்முறையீடு செய்தார்.

குறித்த வழக்கை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், பாலம் திருத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை பின்பற்றப்பட்டிருந்தாலும் கண்தெரியாதவரும் அந்த வீதியால் பயணிக்க வேண்டும் என்பதால், பாலம் திருத்தப்படுகிறது – வீதி திருத்தப்படுகின்றது என்பதை கண் தெரியாதவருக்கும் தெரியப்படுத்துவது கட்டாயமானதாகும்.

எனினும் பாலம் திருத்தும் நிறுவனம் நட்டஈடு வழங்க வேண்டும் என தீர்ப்பு வழங்கியது.

தீர்ப்பு வழங்கியது சரி. அந்த தீர்ப்பு இப்போது இவ்விடத்தில் எதற்காக என்று நீங்கள் முணுமுணுக்கலாம். எல்லாம் எங்களோடு தொடர்புபட்டதுதான்.

யாழ்ப்பாணம், செம்மணி வீதியில் கடந்த புதன் அன்று இரவுவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அந்த வீதியில் திருத்தப்படும் பாலத்திற்குள் வீழ்ந்து பலியாகிப் போனார்கள்.

யாரும் அறியாத வகையில் ஒரு கணப் பொழுதில் நடந்த இந்த துயரச் சம்பவத்துக்கு யார் காரணம்?

மாரி காலத்தில் பாலம் கட்டும் எங்கள் பண்பாடும், திருத்தவேலைகளின்போது பயணிகளின் நலன் கவனிக்கப்படாத போக்குகளும் திருத்த வேலைகளை விரைவுபடுத்தாத அசமந்தங்களும் இரண்டு பேரின் உயிர்களை சாதாரணமாக காவு கொண்டுவிட்டது.

என்ன செய்வது! இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க யார் உளர்?

செம்மணி பாலத்திற்குள் வீழ்ந்து இருவர் பலி என்பதோடு அந்தக்கதை முற்றுப் பெறுகிறது. அவ்வளவுதான்.

## இலங்கைக்கு விஜயம் செய்வோரை பாதுகாக்க பிரி.வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்பவர்களின் பாதுகாப்பை இலங்கை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்று பிரித்தானியாவின் உயர்ஸ்தானிகர் ஜோன் ரென்கின் வலியுறுத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டை பகுதியில் வைத்து பிரித்தானியர் ஒருவர் கடந்த வருடம் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளில் எந்தவிதமான முன்னேற்றங்களும் இல்லாமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்கின்றவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

இதற்கு இலங்கை அரசாங்கம் அனைத்த சட்டத்திட்டங்களையும் சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-11)

## இன்னிசை விருந்தும் பாராட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் திருவூர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இன்னிசை விருந்தும் பாராட்டு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு தமிழ்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இணுவில் திருவூர் ஒன்றிய தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலை நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், சிறப்பு விருந்தினர்களாக இராணுவ விளையாட்டுத் துறைப் பணியக பணிப்பாளர் பிரிகேடியர் ரவி இரத்தினசிங்கம், பொலிஸ் போக்குவரத்து பிரிவு பணிப்பாளரும் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான க.அரசரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்பாராட்டு வைபவத்தில் கலாபூஷணம் விருது பெற்றவர்களான மூத்த தம்பி சிவலிங்கம், கார்த்திகேசு வைத்தீஸ்வரன், உருத்திராதிபதி பாலகிருஷ்ணன், தம்பு சிவசுப்பிரமணியம், சாந்தினி சிவநேசன் ஆகியோர் பாராட்டு பெறவுள்ளனர்.

பாராட்டுக்களை தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலய தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், ஓய்வு நிலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி வி.ஜெகநாதன், பொதுச் சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் உடுவை எஸ்.தில்லை நடராசா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன், இலங்கை மன்றக் கல்லூரி செல்வி விஜித்தா சிவபாலன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து இணுவில் ஒலி சஞ்சிகை வெளியீடு இடம்பெறுவதோடு வயலின் மேதை வி.ஆர்.இராதாகிருஷ்ணன் வழங்கும் இன்னிசை விருந்தில் அணி செய் [illegible] ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (அ-5)

## வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே திணைக்கள தலைவர்களையும் பிரதேச திணைக்கள தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி களையும் தவறாது சமுகமளித்து ஒத்துழைக்கும்படி பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (அ-3,24)

## பரு.பி.சபையின் மாதாந்தக் கூட்டம்

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந் தக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் பூபாலசிங்கம் சஞ்சீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3,24)

## நிர்வாகிகள் தெரிவு

வடமராட்சி தெற்கு மேற்கு பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 5 ஆம் ஆண்டு பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த 8 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இப் பொதுக்கூட்டத்தில் நிர்வாகத்தின் புதிய தலைவராக ஓய்வு பெற்ற தபாலதிபர் வி.எஸ்.வீரசிங்கம், செயலாளராக ஓய்வு பெற்ற அதிபர் சி.க.லோகநாதன், பொருளாராக்கபட்ட அளவையாளர் க.தா.சிறீஸ்கந்தசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர்.

மேலும் நிர்வாக சபை அங்கத்தவர்களாக சிவசிதம்பரம் உமாபதி கயிலாயநாதன், செவ் வந்தியான் சிவப்பிரகாசம் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (அ-2)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



நீங்கள் என்னை விரும்பும் அளவிற்குப் பன்மடங்கு அதிகமாக நான் உங்கள் மேல் அன்பு வைத்துள்ளேன் என்று நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். உங்கள் மேல் நான் வைத்திருக்கும் அன்பைப் பற்றி உங்களால் புரிந்து கொள்ளவே முடியாது. சில சமயங்களில் நீங்கள் துயரத்தில் உள்ளபோது என்னால் தாங்கவே முடியாது. நான் என் சீடர்களுடன் இருக்கும் போது சில சமயங்களில் அழுதே விடுவேன். உங்கள் மேல் எனக்கிருக்கும் அன்புதான் இந்தச் செயல்கள் செய்வதற்கு எனக்கு ஊக்கமளிக்கிறது. அம்மாவும் நானும் உங்களை எவ்வளவு நேசிக்கிறோம் என்று உங்களால் அறிந்து கொள்ளவே முடியாது.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உழைத்து வாழவேண்டும்



- தைரியமாயிருங்கள். பலமுடையவர் ஆகுங்கள். உங்கள் மீதே முழுப்பொறுப்புகளையும் சுமத்திக் கொண்டு செயற்படுங்கள்.
- உங்கள் விதியை நிர்ணயிப்பவர் நீங்களே. உங்களுக்கு வேண்டிய பலமும் துணையும் உங்களுக்குள்ளேயே இருக்கின்றன.
- கொழுந்து விட்டெரியும் அன்பும் தன்னலமில்லாத பண்பும் ஒழுக்கமும் கொண்ட நல்லவர்களையே இந்த மண்ணுலகம் வேண்டி நிற்கிறது.
- உழைத்து வாழுங்கள். இவ்வுலக வாழ்வு எத்தனை நாள் என்பது நமக்குத் தெரியாது. உலகில் தோன்றியதன் அறிகுறியாக ஏதேனும் நல்லதைச் செய்ய முயலுங்கள்.
- உங்களுக்குள் இருக்கும் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்துங்கள். அதன்பின் உங்களைச் சுற்றியிருக்கும் ஒவ்வொன்றும் சீராக ஒழுங்காகி விடும்.
- வாழ்வில் நன்மை பெற வேண்டுமானால் மனிதர்களுக்கு முதலில் தொண்டு செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்க நடிகையும் ஐ.பி.எல்.இல் ஆட வருகிறார்

6 ஆவது ஐ.பி.எல் போட்டியின் ஆரம்ப விழாவில் அமெரிக்க நடிகையும் பாடகியுமான ஜெனீபர் லோபஸ் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

6ஆவது ஐ.பி.எல். போட்டி அடுத்த மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகி மே 26ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இதில் 9 அணிகள் பங்கேற்கின்றன. ஈடன்கார்டன் மைதானத்தில் நடைபெறும் இந்த போட்டியின் ஆரம்ப ஆட்டத்தில் நடப்பு சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - டில்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதுகின்றன.

இதற்கு ஒருநாள் முன்னதாக ஐ.பி.எல். போட்டியின் தொடக்க விழா கொல்கத்தாவில் நடைபெறுகிறது. கொல்கத்தா அணியின் உரிமையாளரும், நடிகருமான ஷாருக்கானின் ரெட் சில்லிஸ் என்டர்டெய்ன்மெண்ட் நிறுவனம் தொடக்க விழாவை நடத்துகிறது.

அமெரிக்க நடிகை மற்றும் பாடகியுமான ஜெனீபர் லோபஸ் ஐ.பி.எல். தொடக்க விழாவில் பங்கேற்று நடனமாடுகிறார். இதை கொல்கத்தா அணியின் உரிமையாளர்களில் ஒருவரான நடிகை ஜுகி சாவ்லா தெரிவித்தார்.

ஷாருக்கான் பாடலுக்கு ஜெனீபர் லோபசுடன் பாலிவுட் நடிகைகள் கத்ரினா கயூப, தீபிகா படுகோனே ஆகியோரும் பங்கேற்று நடனமாடுகிறார்கள். இந்த ஆரம்ப நிகழ்ச்சியை ஷாருக்கான் தொகுத்து வழங்குகிறார்.

# இந்தியா — பாகிஸ்தான் ஹொக்கிப் போட்டி இரத்து!

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஹொக்கிப் போட்டிகளை நடத்த இந்திய அரசு அனுமதி அளித்திருந்தது. அதன்படி பாகிஸ்தான் ஹொக்கி அணி, ஏப்ரல் 5ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டி கள் கொண்ட தொடரில் விளையாடும் என அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து இந்திய அணி ஏப்ரல் 23ஆம் திகதி பாகிஸ்தான் சென்று விளையாட திட்டமிடப்பட்டது.

இந்நிலையில் ஸ்ரீநகரில் சமீபத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில், பாகிஸ்தானுக்கும் தொடர்பு இருப்பதாக புகார் எழுந்துள்ளது. மேலும் அப்சல் குருவின் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டதைக் கண்டித்து பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய பாராளுமன்றத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் பாகிஸ்தான் ஹொக்கி அணியுடனான போட்டிகளை நடத்தினால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் இந்தியா - பாகிஸ்தானுடனான ஹொக்கி போட்டித் தொடரை வெளியுறவுத்துறை இரத்து செய்துள்ளது.


# ஆவணப் படம்

காதலர் தினத்தன்று காதலியை சுட்டுக்கொன்ற பிஸ்டோரியசின் இப்போதைய நிலை குறித்து, விரைவில் ஆவணப் படம் ஒன்று வெளியாக உள்ளது. 'பிஸ்டோரியஸ் சம்பவத்தில் உண்மையில் நடந்தது என்ன' என்ற பெயரில் வெளிவரவுள்ள அதில், பிஸ்டோரியஸ் நண்பர் மைக் கூறியுள்ள கருத்துக்கள் வருமாறு,

தனது காதலி மரணத்துக்குப் பின், பிஸ்டோரியஸ் மிகவும் உடைந்து போய்விட்டார். வழக்கை நடத்துவதற்கு பணம் இல்லாமல் தவிக்கிறார். இதற்காக ஆசையாக வளர்த்த பந்தய குதிரைகளை விற்றுவிட்டார். எப்போதும் ஸ்டீன் கேம்ப் குறித்து பேசிக் கொண்டே உள்ளார். தனது காதலி மற்றும் குடும்பத்துக்காக பிரார்த்தனை செய்யுமாறு எங்களிடம் கூறுகிறார். அவரது பேச்சில் தன்னம்பிக்கை இல்லாமல் உள்ளது. நடைபிணமாக நடமாடுகிறார் என அதில் தெரிவித்துள்ளார்.

# மொகாலி டெஸ்ட் ஆஸி. 273/7

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான 3ஆவது டெஸ்ட் போட்டி மொகாலியில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்க இருந்தது. ஆனால் தொடர்ச்சியான மழையால் நாணயச் சுழற்சி கூட இடம்பெறாத நிலையில் முதல் நா[ள்] ஆட்டம் கைவிடப்பட்டது. முதல் நாள் ஆட்டம் கைவிடப்பட்டதால் அரை மணித்தியாலம் முன்பாக காலை 9 மணிக்கு நேற்றைய போட்டி ஆரம்பமானது.




நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய டேவிட் வோர்னர், எட்கோவன் ஆகியோர் அணிக்கு சிறந்த அடித்தளத்தை இட்டுக்கொடுத்தனர். இருவரும் நிதானமாக ஆடிக்கொண்டிருக்கும்போது 48 ஆவது ஓவரில் அணி 139 ஓட்டங்களைப் பெற்றபோது ஜடஜாவின் பந்து வீச்சில் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய வோர்னர் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் கிளார்க் ஜடேஜாவின் அடுத்த பந்தில் எதிர்பாராத விதமாக ஓட்டம் எதுவும் பெறாதநிலையில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் வந்த ஹியூக்ஸ் 2 ஓட்டங்களுடன் ஓஜாவிடம் சரணடைந்தார். இந்நிலையில் அணி 151 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. தொடர்ந்து வந்த ஸ்மித், எட்கோவனுடன் ஜோடி சேர்ந்து சிறிது நேரம் ஆடினார். அணி 198 ஓட்டங்களைப் பெற்றபோது எட்கோவன் 86 ஓட்டங்களுடன் சதத்தை கோட்டைவிட்டு பவிலியன் திரும்பினார். அடுத்து வந்த ஹடின் ஸ்மித்துடன் ஜோடி சேர்ந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த போராடினார். இந்த ஜோடியும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. அணி 244 ஓட்டங்க ளைப் பெற்றபோது ஹடின் 21 ஓட்டங்களுடனும் தொடர்ந்து வந்த ஹென்றிக்ஸ் 2 பந்துகளை மாத்திரம் சந்தித்து எதுவித ஓட்டங்களையும் பெறாமல் இஷாந்த் சர்மா பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர். அதன்பின் வந்த சிடில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஜடேஜா பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அதைத்தொடர்ந்து களம் இறங்கிய ஸ்டார்க், ஸ்மித்துடன் ஜோடி சேர்ந்து விளையாடினார். ஸ்மித் நிதானமாக விளையாடி அரை சதம் அடித்தார். இறுதியில் அவுஸ்திரேலிய அணி 2 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 104 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஸ்டார்க் 20 ஓட்டங்களுடனும் ஸ்மித் 58 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் ஜடேஜா 3, இஷாந்த் சர்மா 2, அஸ்வின், ஓஜா தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

நேற்றைய போட்டியில் அவுஸ்திரேலிய அணியில் மேக்ஸ்வெல் இ... வில்லை. பிராட் ஹாடின், சிடில், லியான், ஸ்டார்க் ஆகியோர் அணியில் சே... பட்டிருந்தனர்.

இந்திய அணியில் ஏற்கனவே ஷேவாக்கும், ஹர்பஜன் சிங்கும் நீக்கப்பட்டனர். ஷேவாக்குக்குப்பதில் டில்லி வீரர் ஷிகார் தவானும், ஹர்பஜன்சிங்குக்கு பதில் பிரக்யான் ஓஜாவும் இடம்பெற்றனர். 3 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# திணறுகிறது நியூசிலாந்து



நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 465 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக 2 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்று 2 ஆம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து ஆட்டத்தின் முதலாவது பந்திலேயே ஜொனதன் ட்ரொட் ஆட்டமிழந்தார். அவ்வணி 7 விக்கெட்டுக்களை இழந்து 374 ஓட்டங்களைப் பெற்றுக் காணப்பட்டபோது மற் பிரயர், ஸ்டீவன் ஃபின் இருவரும் இணைந்து 83 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜொனதன் ட்ரொட் 121 ஓட்டங்களையும் நிக் கொம்ப்டன் 100 ஓட்டங் களையும் மற் பிரயர் 82 ஓட்டங்களையும் கெவின் பீற்றர்சன் 73 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக புரூஸ் மார்ட்டின் 4 விக்கெட்டுக்களையும் ட்ரென்ட் போல்ட்ற், நீல் வக்னர், கேன் வில்லியம்ஸன் மூவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நேற்றைய நாள் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் கேன் வில்லியம்ஸன் 32 ஓட்டங்களோடு ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத்தாடி வருகிறார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட் 2 விக்கெட்டுக்களையும் ஜேம்ஸ் அன்டர்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# அசத்தியது தீவுகள்



சிம்பாவேக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 9 விக்கெட் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்றது.

பிரிட்ஜ்டவுனில் நடைபெற்ற இப் போட்டியில் முதல் இன்னிங்சுக்காக முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே 76.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு தனது முதல் இன்னிங்சுக்கு ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 84.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 307 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக அணித் தலைவர் டேரன் சமி 73, ராம்தின் 62, சாமுவேல்ஸ் 51 ஓட்டங்களைப் பெற்றனர். சிம்பாப்வே தரப்பில் ஜார்விஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் 96 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது 2ஆவது இன்னிங்ஸை ஆடிய சிம்பாவே, 41.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் ஷில்லிங்ஃபோர்டு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. ஆட்ட நாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் ஷில்லிங்ஃபோர்டு தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியுடன் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது மேற்கிந்தியத் தீவுகள். 2ஆவது போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி டொமினிகாவில் ஆரம்பமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் போரில் வருண பகவான்



யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் மழை இடையூறு



செய்ததால் போட்டியானது இரண்டு தடவைகள் நிறுத்தப்பட்டது.

வழமையாக ஒருநாளில் வீச வேண்டிய 90 ஓவர்களுக்கு பதிலாக நேற்றைய தினம் 59 ஓவர்கள் வீசப்பட்டன.

நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 19 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 40 ஓட்டத்தினை பெற்றிருந்தது. களத்தில் சௌமீதரன், யூனிஸ், கனிஷ்டன் ஆகியோர் இருந்தனர்.



நேற்றைய தினப் ஆட்டத்தினை தொடர்ந்த இருவரும் நிதானமாக தமது ஆட்டத்தினை தொடர்ந்தனர்.

இருவரும் தமக்குள் 41 ஓட்டத்தினை இணைப்பாக பெற்றுக்கொண்ட போதும் அதிக நேரம் களத்தில் நின்று சென். ஜோன்ஸ் அணி வீரர்களுக்கு சிரமத்தைக்கொடுத்தனர்.


எனினும் இறுதியில் லோகதீஸ்வரரின் பந்தில் யூனிஸ் கனிஸ்ரன் போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

நேற்றைய ஆட்ட நேரமுடிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 78 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 126 ஓட்டத்தினை பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் சௌமீதரன் 28 ஓட்டத்தினையும், யூனிஸ் கனிஸ்டன் 23 ஓட்டத்தினையும், அலன்ராஜ் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டத்தினை பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் லோகதீஸ்வர் 4 விக்கெட்டினையும்; கானாமிர்தன் 2 விக்கெட்டினையும், நிலோசன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி தமது முதல் இனிங்சில் அனைத்தும் விக்கெட்டினையும் இழந்து 183 ஓட்டத்தினை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. போட்டியின் மூன்றாவதும் இறுதியுமான நாள் இன்றாகும்.



# மத்திய அரசிலிருந்து...

தொடராது என்று அதன் தலைவரான மு. கருணாநிதி எச்சரித்துள்ளார். இது தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர், அமெரிக்கா கொண்டுவரவிருக்கும் தீர்மானங்கள் குறித்து பல கருத்துக்கள் பரப்பப்படும் சூழலில், அந்தத் தீர்மானத்தில் இலங்கையில் அண்மைக் காலத்தில் நடைபெற்ற இனப்படுகொலை குறித்தும் அந்தப் படுகொலைக்குக் காரணமான போர் குற்றவாளிகளை அடையாளம் காட்டுவது குறித்தும்,

அப்படி அடையாளம் காட்டப்படுபவர்கள் மீது சுதந்திரமான சர்வதேச விசாரணையை நடத்தி குறிப்பிட்ட காலவரையறைக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற திருத்தத்தை அமெரிக்க அரசின் தீர்மானத்தில் சேர்ப்பதற்கான முயற்சியினை எந்த ஐயப்பாட்டிற்கும் இடம் கொடுக்காத வகையில் இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று தி.மு.கவின் சார்பில் வலியுறுத்துவதாகக் கூறுகிறார்.

அத்தகைய கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் தி.மு.க இந்திய அரசின் அமைச்சரவையிலே இனி மேலும் நீடிப்பதென்பது அர்த்தமற்றதாகி விடும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்வதாகவும் கருணாநிதி மேலும் கூறியுள்ளார். (எ-11)

# இலங்கை அரசாங்கத்தின் மீது...

என்பவற்றின் அடிப்படையில் தம்மை ஒரு தேசமாகக் கருதும் தமிழர்கள் போன்ற ஒரு மக்கள் கூட்டத்திற்கு தமது பிரச்சினைகள் பற்றி எடுத்தியம்புவதற்கான வாய்ப்பை வழங்குவதில்லை என்பதற்கு இலங்கை தொடர்பாக நடத்தப்பட்டு முடிந்த மனித உரிமை மீளாய்வு நல்லதோர் உதாரணம்.

அவர்களுடைய உண்மையான பிரச்சினைகளும் அபிலாசைகளும் ஒரு தேசத்தை அழிக்கும் பிரச்சினையாகப் பார்க்கப்படாமல் வெறுமனே தனிநபர் மனித உரிமைப் பிரச்சினையாகப் பார்க்கப்படுகின்றது. இலங்கை தொடர்பான கடந்த மனித உரிமைகள் மீளாய்வின்போது ஆஸ்திரியாவினால் முன்வைக்கப்பட்ட யோசனையில் "தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்" என்பதில் மட்டுமே "தமிழர்கள்" பற்றிய குறிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர்கள் ஒரு பிரத்தியேகமான மக்கள் என்ற வகையிலும் அவர்களுக்கு பிரத்தியேகமான பிரச்சினைகள் இருக்கின்றன என்ற வகையிலும் தமிழர்களது பெயர்தானும் இவ்விவாதத்தில் வேறெங்கும் குறிப்பிடப்படவில்லை என்பது கவலையளிக்கின்றது.

இந்த மனித உரிமை மீளாய்வானது எந்தளவிற்கு தமிழர்களை நீக்கிக் கொண்டு நடத்தப்படுகின்றது என்றால் 65 வருட கால சிங்கள-தமிழ் இன முரண்பாட்டைப் பற்றிப் பெரிதும் அறியாதவர்கள் "மீளிணக்கம்" என்பதனுள் எந்தத் தரப்புக்கள் உள்ளடங்குகின்றன என்பதனைக் கூட அறியாதவர்களாகி விடுவார்கள்.

திட்டமிட்ட வகையில் தமிழர்களது தேசிய இருப்பை இல்லாமல் செய்தற்கான முயற்சியே இலங்கையின் 26 வருடகால யுத்தத்திற்கான காரணகர்த்தாவாகும்.

"இலங்கை" என்பது உண்மையில் "சிங்கள பௌத்த அரசு" என்பதன் ஓர் குறியீட்டுப் பெயராக இருக்க இலங்கை அரசாங்கம் தாம் "இலங்கையர்" என்ற அடையாளத்தினை முன்னிறுத்தி வேலை செய்வதாகக் கூறும்போது நாம் அச்சமடைகின்றோம்.

இந்த வேளையில் நாம் சர்வதேச மேற்பார்வையுடன் கூடிய ஓர்நிலைமாற்று கால நிர்வாகத்தை தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களது தாயகமான வடக்கு கிழக்கில் இடம்பெற்று வரும் பேரழிவில் இருந்து உடனடியாக பாதுகாக்கும் நோக்கில் அமைக்குமாறு கோரி நிற்கின்றோம்.

இறுதியாக இலங்கை அரசாங்கமானது சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தொடர்பான மீறல்கள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பாகச் செய்யப்பட்டு வரும் அனைத்துலக பரிந்துரைகளையும் நிராகரித்து வருவதனால் ஓர் சுயாதீனமான, சர்வதேச விசாரணையை நாம் கோரி நிற்கின்றோம் என்றார். (எ-11)

# உண்ணாவிரத மாணவர்கள்...

நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரி மாணவர்கள் 8 பேர் கடந்த 8-ம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலை காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

கோயம்பேட்டில் தனியாருக்குச் சொந்தமான இடத்தில் உண்ணாவிரதம் இருந்த மாணவர்களை அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்.

இந்த மாணவர்கள் அனைவரும் குண்டுகட்டாக தூக்கிச் செல்லப்பட்டு ராயப்பேட்டை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். பின்னர் இவர்களின் உண்ணாவிரத போராாட்டம் முடித்துக் கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் பெரும்பாலான மாவட்டங்களில் மாணவர்கள் சாலை மறியல், கொடும்பாவி எரிப்பு என பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

சென்னை பாரிமுனையில் அம்பேத்கர் சட்டக் கல்லூரி வளாகத்தில் 4 நாட்களாக 27 மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்கள். இவர்களுக்கு நேற்று முன்தினம் மாலையில் மயக்கம் ஏற்பட்டது.

உடனடியாக மருத்துவக் குழுவினர் விரைந்து சென்று அவர்களது உடல்நிலையை பரிசோதித்தனர். [illegible] அவர்களுக்கு குறைந்த ரத்த [illegible] ஏற்படுவதற்கான அறிகுறிகளும் காணப்பட்டன.

இதேபோல சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்திலும் மோனிஷா என்ற மாணவி உட்பட 13 பேர் 4-வது நாளாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

இவர்களில் முதலாம் ஆண்டு படிக்கும் மாணவர்களான பீமராஜ், புவனேஸ்குமார் ஆகியோருக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டது. 2 பேரும் ராயப்பேட்டை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

செங்கல்பட்டு சட்டக் கல்லூரியிலும் மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டம் 4-வது நாளாக நீடித்து வருகிறது. உண்ணாவிரதம் இருந்த 21 பேரில் விக்னேஷ், ஸ்ரீதர், நாகராஜ், சி.கே.மணிகண்டன், என்.மணிகண்டன் ஆகிய 5 பேர் மயக்கமடைந்தனர்.

இவர்களும் செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். செங்கல்பட்டு சிறப்பு முகாமில் உள்ள அகதி ஈழநேரு 4-வது நாளாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

சென்னை மற்றும் செங்கல்பட்டில் மொத்தம் 13 மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்து மயங்கி விழுந்துள்மை குறிப்பிடத்தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரை...

இதில் சுமார் 45 ஆயிரம் ரூபாயும் 10 பவுண் தங்க நகைகளும் கொள்ளை யிடப்பட்டுள்ளதுடன் குடும் பஸ்தர் மீது வாள் வெட்டும் இடம்பெற்றுள்ளது.

நேற்றிரவு ஆட்டோ வில் சென்ற 6 பேர் கொண்ட குழு வாள்கள் மற்றும் பொல் லுகளுடன் பிரஸ்தாப வீட்டி னுள் நுழைந்து அங்கிருந்த வர்களை தாக்கி பணம் மற் றும் நகைகளை கொள்ளை யடித்துள்ளனர்.

அதனைத் தடுக்க முற் பட்ட வீட்டு உரிமை யாள ரான சிவலிங்கம் சிவகுமார் (வயது 38) என்பவர் வாள் வெட்டுக்கு இலக்கானார்.

இதனையறிந்து கூக் குரல் இடவே திருடர்கள் தப்பிச்சென்றனர். தப்பிச் சென்ற கொள்ளையர் களில் 4 பேரை மடக்கிப்பிடித்த இராணுவத்தினர் அவர் களை வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத் தனர். (எ-246)


Personal Group **Auto CAD**

Lecturer By: K.N. Muguntham (D.A) Cert.in Auto CAD Software University of Colombo - Open University of Sri-Lanka Faculty of Engineering- University of Peratheniya 0775116320-071 8617972

**டோகா / கட்டார் போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பு**

பொறியியலாளர், தச்சுத்தொழிலாளர், சாரதி, கட்டடத் தொழிலாளர், இரும்பு ஒட்டுநர், குழாய் பொருத்துநர்கள், குளிரூட்டி திருத்துநர், J.C.B. இயக்குநர்கள், மின் இணைப்பாளர், உதவியாளர்

✔ 1 மாதத்துக்குள் விசா செய்து கொடுக்கப்படும்

✔ நல்ல சம்பளம்

இலவச தங்குமிட வசதி, உணவு, மருத்துவ வசதி, பயணச்சீட்டு 50,000/- கடன் வசதி செய்து தரப்படும்.

Supra Foreign Employment Agency

*In Joint Venture With* iCS Study Overseas

தொடர்புகளுக்கு:
*No: 77, Clock Tower Road, Jaffna. 021 730 6000*






புதுவருடத்தை முன்னிட்டு மலிவு விலையில்...

குழந்தைகளுக்கான ஆடைகள், விளையாட்டுப் பொருட்கள், கல்வி உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள், பொழுதுபோக்கு சாதனங்கள், அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோன்சன் உற்பத்திப் பொருட்கள் (கிறீம், கொலோன் வகைகளுக்கு 5% விலைக்கழிவு)

**ABI Baby Mart** & Show Room

கலட்டிச் சந்தி அருகாமை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0750519482





# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 24 09 1967



உதிர்வு 14 03 2013

## அமரர்: கு. அமரசிங்கம் (ரவி)


புனர்வாழ்வு கிளையதனின் கூடுகின்ற
பறவைகளில் ஒரு பறவை பிரிந்ததுவோ!
புன்னகை முகமுடையாய் எங்கள் உயிர்
சகோதரனே அமரசிங்கம் அமரரானார்
அதிர்ச்சியூட்டும் செய்தியது. அடுத்த வாரம்
வருவேன் என்றாய் உன்வரவு பொய்த்ததனால்
புலம்புகின்றோம் நாங்கள் இன்று
புண்பட்ட இதயங்களை ஆற்றிட வருவாயோ?

திட்டப்பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள்,
புனர்வாழ்வுக்கிளை,
மாவட்டச் செயலகம்,
முல்லைத்தீவு.

(C-2700)

# மரண அறிவித்தல்

## பொன்னையா பரமேஸ்வரன்



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும், புளியங்கூடலை புகுந்த இடமாக வும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பரமேஸ்வரன் 11.03.2013 அன்று ஜேர்மனியில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான புளியங் கூடல் லைற் வேலுப்பிள்ளை தங்கம்மா தம் பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரி யின் அன்புக் கணவரும் லுகாஜினி (பிரான்ஸ்), மதுராங்கனி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மகேஸ்வரிதேவி மற்றும் பஞ்சலிங்கம் (பிரான்ஸ்), மகாலிங்கம் (சுவிஸ்), மேனகராணி (பிரான்ஸ்), சரஸ்வதி (கொழும்பு), மகேந்திரன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சிவகடாட்சம் (மெக்கானிக்) மற்றும் இராசரத்தினம், இராசலட்சுமி, காலஞ் சென்ற மகாதேவா மற்றும் நவரத்தினம், அமிர்தாதேவி, சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும், சந்திரகுமாரின் (பிரான்ஸ்) மாமனாரும், சண்பகா (பிரான்ஸ்), சகானா (பிரான்ஸ்), சஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைப்பேரனும், காலஞ்சென்ற மோகன் மற்றும் மோகனவசந்தா, மோகனகுமார், ரவிச்சந்திரன், உமாதேவி (ஆசிரியை, யா/வேலணை மத்திய கல்லூரி), செந்தமிழ்ச்செல்வன் (உள்ளககணக்காய்வு உத்தியோகத்தர் சமுர்த்தி அதிகார சபை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), அருட்செல்வன் (ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம், யாழ்ப்பாணம்), ஸ்ரீதேவி (பிரதேச செயலகம் ஊர்கா வற்றுறை) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.03.2013 இன்று சனிக்கிழமை 3.00 மணிக்கு (இலங்கை நேரப்படி) ஜேர்மனி Greven நகரில் இடம்பெறும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக் கொள்ளவும்.

**Stauffen Berg Str -11, 48268. Greven.**

தகவல்: (பெறாமகன்கள்)
ஞா. செந்தமிழ்ச் செல்வன்,
ஞா. அருட்செல்வன்.

(2171)


தற்போது யாழ் நகரில்...

**LLB (Hons) in LAW**

from University of Wolverhampton




**Why Choose BCAS for Law?**

> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.

> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது

> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.

> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நாடாத்துகின்றது.

> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

Macro Ads (க-2692)

**BCAS CAMPUS** BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For further details :
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk
Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.